
உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



# சைவநீதி
# SAIVANEETHI


| மலர் 6 | சித்திரபானு - பங்குனி | MARCH - APRIL 2003 | இதழ் 12 |
|---|---|---|---|

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ரூபா 25/=

# அஞ்சலி

சைவ நீதி கௌரவ ஆசிரியரும் நிர்வாக ஆசிரியரின் தந்தையுமாகிய
சைவப்புலவர்மணி, வித்துவான், ஞானசிரோமணி, கலாபூஷணம்

**திரு. வ. செல்லையா அவர்கள்**

சித்திரபானு வருடம் மாசி மாதம் பூர்வபக்கத் திருதியையில்
2003-03-06 அன்று சிவபதம் அடைந்தார்.
அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அஞ்சலி செய்கிறோம்.

ஆசிரியர்குழு

# பொருளடக்கம்

பக்


1. கௌரவ ஆசிரியரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம் .......... 01
2. திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் .......... 02
3. எல்லையில்லா அறிஞன் செல்லையா நாமம் .......... 03
4. இவ்வுடம்பு நல்லதோர் வீணை .......... 04
5. திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரங்களை விளக்குவதற்குத் திருத்தொண்டர் புராணம் பெரிதும் துணைபுரியும் .......... 06
6. சிவப்பிரகாசம் .......... 08
7. உருத்திராக்கம் .......... 11
8. தானம் .......... 16
9. சைவ நெறிக்குத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் அமரர் வித்துவான் வ. செல்லையா அவர்கள் .......... 18
10. [illegible]த்தின் பெருமை .......... 20
11. சைவத்தின் தொன்மையும் சிறப்பும் .......... 25
12. மூலாதாராதிப மூர்த்தி .......... 27
13. பதினெண் சித்தர்கள் - ஸ்ரீ [illegible] .......... 28
14. நினைவிற் கொள்வதற்கு


**சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். -இதழ் நிர்வாகிகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவநீதி

SAIVANEETHY

# சைவநீதி



மலர் 9 : [illegible]


தொடக்குனர்:
கலாபூஷணம், ஞானபிரகாசமணி,
சைவப்புலவர்மணி, வித்துவான்,
திரு. வ. செல்லையா

மதியுரைஞர்:

சிவஸ்ரீ. கு. குருகேஸ்வரக்குருக்கள்

திரு. D. M. சுவாமிநாதன்
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

திரு. அ. கந்தசாமி
Chairman U.P.S.

திரு. கு. மகாலிங்கம்

வெளியீட்டாளர்:
திரு. கோ. திருநாவுக்கரசு
லக்ஷ்மி அச்சகம்

விநியோகம்:
திரு. வ. சிவலிங்கம்
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

நிர்வாக ஆசிரியர்:
திரு. செ. நவநீதகுமார்
42, ஜானகி ஒழுங்கை, கொழும்பு 04.

தொடர்புகட்கு: 7.30 p.m. to 7.30 a.m.

தொலைபேசி: 595221


## கௌரவ ஆசிரியரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

சமயங்கள் பல. ஒவ்வொரு சமயத்தையும் பின்பற்றுவோர் பலர். அவர்கள் அனைவரும் தத்தம் சமய நெறியில் உறுதியாக நிற்பதும் இல்லை, சமயக் கோட்பாடுகளை ஐயந்திரிபற அறிந்திருப்பதுமில்லை. இக்குறையை நீக்குவதற்காகவே மதபோதகர்கள் வேண்டப்படுகின்றனர்.

பல மதங்களைப் பொறுத்தவரையில் அவற்றின் மதகுருமாரே சமய போதகர்களாகவும் பணிபுரிகின்றனர். இந்த விதி சைவசமயத்தவர்களுக்குப் பொருத்தமானதாக இருக்கவில்லை. இவ்வுண்மையை உணர்ந்தமையாற் போலும் சைவ சமயக் குருமார் சைவசித்தாந்த அறிவுடையவர்களாகவும், சமயப் பிரசாரஞ் செய்யக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்திய நாவலர் பெருமான், சைவப்பிரசாரர்களை உருவாக்கவும் திட்டமிட்டார்.

நால்வர் நெறியையும் நாவலரின் கருத்துக்களையும் நன்றாக அறிந்திருந்தவர் சைவநீதியின் கௌரவ ஆசிரியர் சைவப்புலவர்மணி அமரர் திரு. வ. செல்லையா அதனாற் போலும் அவர் 'நால்வர் நெறியில் நாவலர்' என்னும் நூலை எழுதினார்; சைவப் பிரசாரத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டார்.

தமது திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகச் சைவப்புலவர் சங்கத்தை உருவாக்கவும், சைவப் புலவர்களைத் தோற்றுவிக்கவும் மூத்த சைவப் புலவர்களோடு சேர்ந்து முயற்சித்தார். அதன் பெறுபேறாக உருவாகிய சைவப்புலவர் சங்கம் இன்று பாரிய பயன் மரமாக விளங்குகிறது.

இந்தவகையில், சைவசமய வளர்ச்சிக்காக மேலும் என்ன செய்யலாம் என்று சிந்தித்த அவரது சிந்தனையில் உருவாகியது தான் சைவநீதி. இன்று அறுவடையைத்தப்பூர்த்தி செய்யும் நிலையிலுள்ள சைவநீதிக்கு இதன் தோற்றத்துக்கு வித்திட்டவரும் கௌரவ ஆசிரியருமாகிய சைவப்புலவர்மணி கலாபூசணம் வ. செல்லையா அவர்களின் மறைவு பேரிழப்பாகும்.

இந்நிலையில் அவரது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் சைவநீதி நிறுவனம், தொடர்ந்தும் அவர்காட்டிய சீரிய நெறியில் நின்று சிவப்பணி புரியுமென வாசக நேயர்களுக்கு உறுதியளிக்கின்றது.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

**திருவன்னியூர் - திருக்குறுந்தொகை** **ஐந்தாம் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

காடு கொண்டரங் காக்கங்குல் வைய்க்கணம்
பாட மாநட மாடும் பரமனார்
வாட மாலிருங் கொள்வர் மணங்கமழ்
மாட மாமதில் சூழ்வன்னி யூரரே. 1

செங்கண் நாகம் அரையது தீத்திரள்
அங்கை யேந்திநின் றாடெரி யாடுவர்
கங்கைவார்சடை மேலிடங் கொண்டவர்
மங்கை பாகம்வைத் தார்வன்னி யூரரே. 2

ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்
தானங் காட்டிப்புகல் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னி யூரரே. 3

இம்மை அம்மை யெனவிரண் டும்மிவை
மெய்ம்மை தானறி யாது விளம்புவர்
பொய்ம்மை யாலேனை வார்கள்தம் வல்வினை
வெம்மை நீப்பர்கண் டீர்வன்னி யூரரே. 4

பிறைகொள் வாணுதல் பெய்வளைத் தோளியர்
நிறையைக் கொள்பவர் நீறணி மேனியர்
கறைகொள் கண்டத்தர் வெண்மழு வாளினர்
மறைகொள் வாய்மொழி யார்வன்னி யூரரே. 5

திளைக்கும் வண்டொடு தேன்படு கொன்றையர்
துளைக்கை வேழத்தர் தோலர் சுடர்மதி
முளைக்கு மூரற் கதிர்கண்டு நாகம்நா
வளைக்கும் வார்சடை யார்வன்னி யூரரே. 6

குணங்கொள் தோளெட்டு மூர்த்தி யிணையடி
இணங்கு வார்கட் கினியனு மாய்நின்றான்
வணங்கி மாமலர் கொண்டவர் வைகலும்
வணங்கு வார்மனத் தார்வன்னி யூரரே. 7

இயலு மாலொடு நான்முகன் செய்தவம்
முயலிற் காண்பரி தாய்நின்ற மூர்த்திதான்
அயலெ லாமன்ன மேயுமந் தாமரை
வயலெ லாங்கயல் பாய்வன்னி யூரரே. 8-9

நலங்கொள் பாகனை நன்று முனிந்திடா
விலங்கல் கோத்தெடுத் தானது மிக்கிட
இலங்கை மன்ன னிருபது தோளினை
மலங்க வூன்றிவைத் தார்வன்னி யூரரே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையில் புகழினன் செல்லைய நாமம்

## வெண்பா

*செல்வமலி யாழ்ந்தசித்ர பேரி பதிதனிற்றான்*
*கொல்லுதமிழ்த் தொண்டாற்றுஞ் செல்லையா - இல்லுதகவை*
*கொண்டுமிழ்த் தொண்டுசெய்து கொண்டிருக்க வையத்திலிருந்*
*தெண்டர்கொண் டன்றைட் டிலவே.*

*செப்புதமிழ்த் தொண்டுஞ் சிவத்தொண்டும் நன்காற்றிப்*
*பொய்யா விளக்கிவைப்பில் பொங்கிப்பெறும் - பொய்யில்லாத்*
*தொண்டுசெய்த செல்லையாத் தோன்றல் சிறக்க நல்வாழ்வு*
*கண்டுவந்தோ ரார்தான் களித்து.*

## அகவல்

சாற்றுசீ ரரசியல் சக்கர வர்த்திகள்
ஏற்ற மேழுந்திட விளிதர சோக்கிய
செந்தமிழ் வளம்பெறு செல்வயாழ்ப் பாணச்
சுந்தர வளம்பொலியுந் துன்னுமோர் பதியாம்
எத்திசை யும்புக ழிலங்கி விளங்கும்
சித்திர மேழியூர செய்தவ முதிர்வாய்
வந்துதி முல்லை யிறும்பூ தெய்து
செந்தவ மரித்த வளரொளி மிகுந்திடும்
தொழுதொழி லுடையோர் தொழுது பின்செல்லும்
உழுதொழி லதன்சீ ருரைத்திடு குலத்தில்
வந்து தோற்றிய வயிரவப் பிள்ளையும்
சிந்தைத் தூய்மையள் சின்னத் தங்கமும்
பரமனை வேண்டிப் பண்ணா ளியற்றிய
அரும்பெரு தவத்தின் சின்னமா ராகிய
எல்லையில் புகழினன் செல்லைய நாமன்
சொல்லுவ மலத்தினன் தொல்லுயிர் மலத்தினன்
தெய்வமா பக்தியான் செப்பரும் புத்தியான
ஐயமில் கேள்வி யறிவுறப் பெற்றான்
மெய்யினை புணர்ந்தவர் மிகுகுழா முற்றான்
சைவப் புலவன் தண்டமிழ் வித்தகன்
மேலும் பாருந் தேவா ரமிழ்தமு
மாறுங் கவிவகை யமைத்திடு நாவினான்
சற்சனர் நேயன் தளர்ந்தவர் சகாயன்
சொற்பெறு மதுரன் விற்பனச் சதுரன்
தண்டமிழ் சைவந் தன்விழி யானவன்
கொண்டவிற் சொன்மறை வெட்டியல்பானவன்
மக்களின் தொண்டே மகேசனின் தொண்டெனுந்
தக்கவவ் வாக்கியத் தகவு கண்டவன்
மாணவர் தாமு மனவிரு ளதைத்தெறு
மாமயர் பணிதனை மேலும் செய்தவன்
தலைபெறு கலைச் சாலைகள் தோறுந்
தலைமையா சானாய்த் தருபணி புரிந்தோன்
கல்வித் துறையிலுங் கலங்கரை விளக்காய்
நல்வித்துப் பணிபல நாட்டிச் செய்தோன்
செந்தமிழ் சைவஞ் செகதல மெங்கணும்
முந்தைய முனைப்பு முதிர்ச்சியுங் கொள்ள
ஏற்ற சபைகள் ஏற்றமங் கங்கள்
ஏற்ற ஏற்ற இயக்கங் களிலெலா முன்
னாக்கித் தானு மயரா தவற்றிருந்
தூக்கமா யுழைத்திருந் துவகை பூண்டவன்
தெய்வப் புலமைச் சீர் வித்தகரார்
சைவப் புலவர் சங்க மமைத்தவன்
வையகமெலாம்புகழ் வைப்பதற்கான
சைவநீதியெனு மாமலர் மலர்ச்ச
சைவ நீதியென் சஞ்சிகை யதுவும்
ஓய்வும் சோர்வும் தோய்விடா வண்ணம்
மாசிலை யாத மாசிகையாகக்
காசினி யில்வரக் கச்சிதத் துணைபுரிந்தோன்
சாமரம் வீசிச் சான்றவர் புலவரைப்
பாமரர் மனைவர் பண்டிதர் மேதையர்
நன்கு சுவைத்திட நறுந்தமிழ் மூலமலர்
கன்னலஞ்சாறது மெய்மலர்த் தேறலு
மெள்ளள வேனு மில்லையென் றேங்கும்
கொள்ள லெழுதிக் குவித்து மகிழ்ந்தவன்
கல்வெட்டு நாவிலு மெய்வினை வழியுஞ்
செவ்வியர் நெஞ்சிலுந் தேசுற் றொளிர்ந்தவன்
வாழ்வி னெல்லை வந்து குறுக
மாட்சி மிகுந்த வையகஞ்சாம்ப
மக்களு நண்பரும் வாய்த்த சுற்றமும்
ஒக்க வயலுந் தொடர்புகொள் வோரும்
உள்ளங்கலங்கி யழுதுநின் றதிர
வெள்ளத் தன்னுடலை விட்டே யின்னே.

*-உடுப்பிட்டி மணிராஜவல்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வுடம்பு நல்லதோர் வீணை

ஆறுகவே பரமநாதன்

*"குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்
மழலைச் சொற்கேளாதவர்"*

— திருக்குறள்.

குழந்தைகளின் கொஞ்சுமொழி இனிமையை யாழின் இசையோடும் வேய்ங்குழலின் ஒலியோடும் இசைத்துப் பேசியுள்ளார் வள்ளுவப்பெருந்தகை. இவ்விரு இசைக்கருவிகளும் தொன்மையானவை. அழகிய இராகங்களை மீட்டுவன. கண்ணனின் திருக்கரங்களில் திகழ்வது புல்லாங்குழல். இப்புல்லாங்குழலின் இனிமையை ஆழ்வார்களும் பிள்ளைப் பெருமாளையங்காரும் குழைந்துபாடியுள்ளனர். பாரதியும் கண்ணன் பாடலில் "புல்லாங்குழல் கொண்டு வந்தே அமுது பொங்கித் ததும்பு நற்கீதம் படிப்பான்" என அனுபவித்துப் பாராட்டியுள்ளார். இன்றைய சமயிகளிற் சிலர் புல்லாங்குழலோடுள்ள கண்ணபிரானை வீட்டில் வணங்கக் கூடாதெனக் கூறிக்கொண்டு, சைவபூமியான ஈழத்தில் அநுமானை வழிபடுகிறார்கள். கொன்றை யந்தீங்குழல் ஓசைபற்றி இளங்கோவடிகள் (தான் பாடிய சிலம்பிலமைந்த) ஆய்ச்சியர் குரவையில் வியந்து பாடியுள்ளார்.

*"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேலவன் வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோதோழீ"*

என்பது அவர்தந்த பாடல். ஆனாயநாயனார் புராணத்திலும் குழலின் செல்வி வருகிறது. யாழின் அமைந்த இசை நுணுக்கங்கள், யாழமைப்புக்கள் பற்றி ஆராய்ந்து யாழ் நூல் தந்த விபுலானந்தர் அடிகளார். பாணர்கள் யாழ் வாசிப்பதில் வல்லவர்கள். யாழ் முரிப்பண்ணை யாழிலமைத்துப் பாடியவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். திருப்பாணாழ்வார் பாணர் குலத்தவர். சகோட யாழ் செங்கோட்டு யாழ், மகரயாழ் என்பன யாழ் வகைகள். யாழொலி, குழலொலி, கூத்தொலி யென்ற பிரயோகம் திருமுறையில் வருகிறது. இது ஒரு நரம்புக் கருவி. பாணரை வழிப்படுத்திய நூல்கள் பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படையெனும் சங்க இலக்கியங்கள். கலைவாணி கையிலும் விநாயகர் கரத்திலும் யாழைக் காண்கிறோம். வீணைக் கொடியுடைய இலங்கை வேந்தனான இராவணன் கைலை மலையை எடுத்தபோது சிவனின் பெருவிரலால் நசுக்குண்டு இராவணன் என்ற திருநாமம் பெற்றான். வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கும் சரஸ்வதி வீணை செய்யும் ஒலியில் இருப்பாள் என்கிறார் பாரதி. இன்னிசை வீணையர், யாழினர், ஒருபால் எனப் பள்ளியெழுச்சி பாடினார் மணிவாசகர். இசைக்கு மயங்காத ஜீவராசிகள் எதுவுமில்லை. பேசும் நாவுடைய யாழின் பெருமை பேசுந்தரமன்று.

யாழின் தந்திகளை இசைவாக முறுக்கேற்றினால் அது அமுதூறும் பொழியும் தந்தி. நரம்பு ஒரு பொருள் அற்புதம். வீணை தனம்மாள் யாழ் வாசிப்பதில் பிரக்யாதி பெற்றவர். யாழின் தந்திகளை மீட்டாமலே காற்றலைகளில் இனிய நாதத்தைத் தன் பாவீர்த்து எதிரொலிக்கும். இவ்வாறு இன்னொரு இசைக்கருவியின் சங்கீதத்தைக் கேட்டு தானும் அதே போல் வாசிக்கும் திறமையுடையது யாழ். குறிப்பாக இசைக்கருவி நின்றாலும் யாழ் தன் ஓசையைத் தொடரும் என்கின்றனர் ஞானிகள். வீணை நரம்பு போல நம்முடலிலும் 72000 நரம்புகள் உள. இந்நரம்புகளிற் பாயும் குருதியைச் சுத்திகரிக்க நாடிச்சுத்தி முக்கியம். நாடிசுத்தியே பிராணாயாமம். நம் மூச்சை வரன்முறைப்படுத்தின் உடல்நலம், உளநலம் பேணப்படும். இவ்வுடம்பு நமக்குக்கிடைத்தது இறைவனை வணங்கி

ஆகூழால் தோன்றும் அசைவின்மை
போகூழால் தோன்றும் மடி. 371
ஆக்கப்பொருள் ஆவதற்குரிய ஊழால் முயற்சி உண்டாகும்.
கைப்பொருளை இழக்கக் காரணமான ஊழால் சோம்பல் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம் என்று நாவலர் வாக்கு கருத்திற்கொள்ள வேண்டியது. உண்டு, உடுத்து, இணைவிழைச்சு செய்யவா நாம் பிறந்தோம். இச்சரீரமாகிய வீணையை மீட்டி இறையோடியைந்த இன்பம், இன்பத்தோடியைந்த வாழ்வைக்காண வேண்டும். இதற்கு ஆதாரசுருதியாய் அமைவது மானிடயாக்கை. இவ்வண்ணம் சிந்திக்கும்போது உடம்பை வெறும் வாச்சியமாகக் காணக்கூடாது. மிக மிக விழுமியம் நிறைந்த மனித சரீரத்தை வீணையாகக் கண்ட பாரதியார் இப்படிச் சிவசக்தியிடம் முறையிடுகிறார்.

*நல்லதோர் வீணை செய்தே - அதை*
*நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ*
*சொல்லடி சிவசக்தி - எனைச்*
*சுடர் மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்*
*வல்லமை தாராயோ - இந்த*
*வையகம் வாழ்வதற்கே.*

தான் வாழவேண்டுமெனக் கொடுவரம் வேண்டாமல் வையகம் வாழும் பொருட்டு சிவசக்தியிடம் வேண்டுதல் செய்கின்றார் மகாகவி. யாழினை அபசுரமாய் மீட்டக் கூடாது. அவ்வண்ணமே மானிடயாக்கையாலும் அபசுரங்களை மீட்டக் கூடாது என்பதை ஒவ்வொரு சமயியும் உணராவிடின் மானிட வாழ்க்கை வெறுமையாய்ப்போகும்.

"நாதம் நாதம் நாதம்; நாதத்திற்கோர் நலிவுண்டாயின் சேதம் சேதம் சேதம்" என்கிறார் பாரதி. நம் அறிவைப் பயன் படுத்தி நமக்கு இயன்றவழி இன்வாழ்க்கையை மேற்கொள்ளாவிடின் பிறவிப்பயன் வீணாய்விடும். நம் உடம்பாகிய வீணையைப் பாவித்து பயன்தரும் கருமங்களையாற்றி, ஆத்ம விடுதலை காணவேண்டும். இதுவே நம் இலக்கு. எனவேதான் திருமூலர்,

*உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்*
*உடம்பினுள்ளே உறு பொருள் கண்டேன்*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.* திருமூலர்.

உடம்பாரழியின் உயிரார் அழிவர் என்ற உண்மையை உணர்வதன் மூலம் நம் உடம்பு வீழுமுன் உடம்பிருக்கும்பிரானாம் சிவனைப் பணிய ஆவன செய்தல் ஒவ்வொரு சைவசமயியின் கடமையாகும்.

உடம்பாகிய வீணையைப் பேணி உயிர் என்னும் இசையை எழுப்பின் யாவும் ஆனந்தமயமாம். இந்த ஆனந்தத் தழுக்கலே உயிர்க்கு விடுதலையாம். இவ்வுடம்பைத் திருக்கோயிலாகக் காணலாம். மணிமொழியாரும் உற்ற ஆக்கையின் உறுபொருள், நறுமலர் எழுதரு நாற்றம்போல், பற்றலாவதோர் பரம்பொருள் பாராதே. பிறவிப்பங்கவில் நம்மனதைப் பறிகொடுக்கக் கூடாதென வழிப்படுத்துகிறார். உண்மையிலே எம்மோடுறையும் இறையருள் காணாதே உலகை நோக்கியுழல்கின்றோம். இதைத் திருமூலர் 'பூவினிற் கந்தம் பொருந்திய போலே, சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது. உள்ளத்தொருவனை உள்ளுறுசோதியை, உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை, உள்ளமும் தானும் ஒன்றாயிருப்பினும் உள்ளமவனை உருவறியாது எனச் சுட்டிக்காட்டுகின்றார். உடம்பு ஒரு க்ஷேத்திரம். இறைவனே க்ஷேத்திரக்ஞன். சரீரம் ஒரு யந்திரம், இறைவனேதான் இயந்திரி என்ற உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது. இந்நடமாடுங் கோயில் இறைவனால் நமக்கு அருளப்பட்டது. இதைப் பேணிப்பாதுகாத்து இறையொளி காண வேண்டும். இன்று நாமாகிய ஆலயம் பற்றித் திருமூலரும், திருநாவுக்கரசரும் என்ன சொல்கிறார்கள் என்பதையும் சிந்திப்போம். இறைவனை வந்திப்போம். சிந்திப்போம்.

*உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாயில்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே.*

-திருமந்திரம்

*காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக*
*வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக*
*நேயமே நெய்யும் பாலாய் நிறையநீர் அமைய ஆட்டி*
*பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.*

-அப்பர் தேவாரம்

Peresseverance comes from a prosperous fate, and idleness from an adverse fate. 371

# திருநாவுக்கரசு நாயனாருடைய தேவாரங்களை விளங்குவதற்குத் திருத்தொண்டர் புராணம் பெரிதும் துணை புரியும்

சிவ. சண்முகவடிவேல்

தேவாரங்கள் மூவர் தமிழ். அவற்றை நாளும் அன்பொடு பக்திப் பாராயணம் பண்ண அல்லல் போம். அன்னை வயிற்றில் தோற்றம் தொல்லை தூரும்.

மூன்று தமிழ் மூலங்கள் மூன்று என்று போற்றப்படும். அதில் 4ம், 5ம், 6ம் திருமுறைகள் திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசு நாயனாருடைய திருவாக்கு. போற்றா உலகேழின் வரும் துயரும் போமாறு புகன்ற வாக்கு.

அவை இறைவனிடத்தில் அன்பு செலுத்தும் அருள்மொழி. அவைகள் தோத்திரப் பாடல்களாகத் துதிக்கப்படுவன.

பரம்பொருளிடத்தில் பக்தி பண்ணும் பாராயணப் பாமாலைகள் எண்ணும் பல பொருளை இலகுவில் வெளிப்படுத்தா. பெரிய புராணத்தின் துணை கொண்டு அல்லாமல் உயிர்ப்பொருளை உற்று உணர்தல் அரிது. மக்களைச் சைவ உலகு சிறக்கச் செய்யும் அளப்பரிய சிவப்பணியில் அதுவும் ஒன்று என்றால் அது மிகையாகாது.

"கூற்றாயினவாறு விலக்ககிலீர்" எனத் தொடங்குவது திருவதிகை வீரட்டானத் திருப்பதிகங்களில் ஒன்று. இத்திருப்பதிகத்திற்கு ஆறுமுகநாவலர் தேவாரத்திரட்டு "குருவருள்" என மகுடமிடும். ஆனால் பல கொடுமை அறிந்து செய்யவில்லை. இரவும் பகலும் திருவடி மறப்பில்லாது எப்பொழுதும் வணங்குவதில் குறையில்லை. அப்படியிருந்தும் சூலைநோய் வயிற்றின் அகம்படி குடரோடு துடக்கி முடக்கி இடுகிறது. ஆற்றாமையை ஆக்குகிறது. கூற்றாயின வாறுகின்றது. திருநாவுக்கரசு நாயனாருக்கு இந்நிலைமை எதனால்? வந்துவிட்டதே. வருவதற்கு காரணம் என்ன? என்று எழும் வினாக்க வினாவிற்குப் பதிகத்தில் பதில் கிடைப்பதாக இல்லை.

அப்பதிகத்தில் ஒவ்வொரு திருப்பாடலிலும், ஈற்றடியில் அதிகைக் கெடில வீரட்டானத் துறையம்மானே! என்று திரிபுரசுந்தரி அம்பிகை சமேத வீரட்டானேசுவரரை விளித்துத் தம்முடைய முறையீட்டை விண்ணப்பஞ் செய்கின்றார்.

"ஆற்றேன் அடியேன் - (1), நஞ்சாகி வந்தென்னை நலிவதனை நணுகாமல் துரந்து கரந்துமிடீர் (2), "துணிந்தே உமக்காட் செய்துவாழலுற்றால் சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர் - (3)". தன்னை யடைந்தார் வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தங் கடனாவது தான் - (4), "நீத்தாய கயம் புகநூக்கியிட, நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன் - (5). உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய் - (6). "வயந்தே உமக்காட் செய்துவாழலுற்றால் வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர் - (7). "கலித்தே யென்வயிற் றினகம் படியே கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தின்னை அலுத்தேன் - (8), துன்பே கவலை பிணியென் றிவற்றை நணுகா மற்றுரந்து கரந்துமிடீர் - (9), "வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால் என் வேதனையான விலக்கியிடாய் - (10).

பத்துப் பாடல்களிலும் இவ்வாறு பாடுகின்றார். பரவுகின்றார். பணிகின்றார். நைந்து கசிந்து பாடுகின்றார்.

விண்ணப்பஞ் செய்வதற்கு முன்னதாகச் சிவபெருமானைத் தாம் பரவும் நிலைமை நெஞ்சு நெக்கு நெக்கு உருகப் போற்றும் நீர்மை கல்நெஞ்சையும் கசியச் செய்யும்.

"கொடுமை பலசெய்தன நானறியேன், ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும் (1), "நெஞ்சம் உமக்கே யிடமாக வைத்தேன் நினையாதொரு போது மிருந்தறியேன் - (2), "பின்னை யடியே னுமக்கா

பேதைப்படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. 372
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும்பட்டேன் - (4). "சலம்பூ வொடுதூ பம் மறந்தறியேன் தமிழோ டிசைபா டல்மறந் தறியேன் நலந்தீங்கிலு முன்னை மறந் தறியே னுன்னா மமென்னா வின்மறந் தறியேன் - (6). "வயந்தே யுழக்காட செய்துவா முழுவற்றால் - (7). இவ்வாறு எல்லாம் திருநாவுக்கரசு நாயனார் தமது வயிற்றுச் சூலை நோயைப் பற்றும்படி மாற்றார் புறம் மாற்றிய வேதியரை மனம் கனிந்து பாடுகின்றார். மருணீக்கி யார் குற்றம் புரியாத ஒருவருக்குக் கோமளக் கொழுந்து ஏன் சூலை நோயைக் கொடுக்க வேண்டும்? சூலை நோயைக் கொடுத்த சுந்தர விடங்கரே சுகமாக்கி விட்டாரா? அப்பருக்கு அரிய சூலையின் போது யார் உதவினார்கள். யாவர் வழிப்படுத்தலால் வீரட்டானத்துறை அம்மானிடத்தில் விரைந்து சென்றார்?

அந்த விரிவுகளை அறிய நமக்குத் துணை புரிவது திருத்தொண்டர் புராணம். திருவாரூர் தேவாசிரியன் மண்டபத்தில் திருக்கூட்டத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அடியார்க்கும் அடியேன் என்று நம்பி யாரூரர் பாதம் பணிந்தார்.

திருநாவுக்கரசு நாயனாரை வாழ்த்தி வணங்கும் போது, திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கு மடியேன்" என்று திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகம் பாடினார் சுந்தரமூர்த்தி நாயனார். திருநாவுக்கரையன் தனக்குச் சிவபெருமான் சூலை நோய் கொடுத்த கதையோ வேறெந்த செய்தியோ இல்லை.

அவற்றை எல்லாம் விளக்கமாகவும் விபரமாகவும் புரியும்படியாகப் பெரிய புராணத்தில் தெரிந்துரை வைக்கின்றார் சேக்கிழார். திருநாவுக் கரசு நாயனார் புராணத்தில் ஏறத்தாழ இருபத்து மூன்றாம் பாடலிலிருந்து எழுபத்தெட்டாம் பாடல் வரையான ஐம்பத்துமூன்று பாடல்களையும் கற்றுணர்ந்து உண்மையை அறிந்து கொண்டால் தான் "கூற்றாயினவாறு" எனத்தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்தின் பொருள் அடைவை நன்குணர முடியும்.

திருநாவுக்கரசு நாயனார் பொருளும், புகழும் நிறைந்த குடும்பத்தில் அவதரித்தவர். அவருக்கு ஒரு அக்கா. அவர் பெயர் திலகவதியார். சிறு பராயத்தில் தந்தை தாயாரை இழந்து தவித்தார்கள் அக்காவும், தம்பியும் விழுந்தவனை மாடு ஏறி உழக்குவது போல் துன்பத்தின் மேல் துன்பமாகத் திலகவதியார் பெற்றோர் மணம்பேசி வைத்த மணாளனைப் போர்க்களத்தில் பலி கொடுத்தார். திலகவதியார் அவ வாழ்வைத் தவிர்த்துத் தம்பியார் உளராகத் தவவாழ்வை மேற்கொண்டார். தம்பியோ நிலையாமையை நினைந்து தமக்கையாரைத் தனிக்க விட்டுத் தனிவழி சென்றார். சமண் வலையில் மருணீக்கியார் மருண்டார் தருமசேனர் என்னும் தலைமை பெற்றார். மருணீக்கியார் திலகவதியார் சுற்றத்தாரைத் துறந்தார்.

"சென்றுதிரு வீரட்டா னத்திருந்த செம்பவளக் குன்றைக் கும்பிட்டுக் கோயிலில் சிவ சின்னம் தாங்கிக் கொண்டார். ஆண்டு விளக்கணையார் சுடர் ஒளியைத் தொழுதார். "தலைமென்று பாயி டுக்கித் தலைபறித்து நின்றுண்ணும் அவமொன்று நெறியிழிவான் வீழாமே அருளும் எனப் பலமுறை யும் விண்ணப்பம் செய்தார்.

அப்போதினியார்க்கு இறைவன் வெளிப்பட்டார். "உன்னுடைய மனக்கவலையை விடுவாய். உன் தம்பி முன்னமே முனிவனாகி என்னை அடையத் தவம் முயன்று செய்தான், அவனை இனிச் சூலை நோயினால் தடுத்தாள்வம்" என்று அருளிச் செய்தார்.

தருமசேனருக்கு வந்த சூலை நோய் தீராமை யால் சமணர்களும் கைவிட்டார்கள். தமக்கை யாரும் பாடலிபுத்திரம் செல்வதற்கு இசைய வில்லை. தருமசேனர் தாமாகவே திலகவதி யாரைத்தேடித் திருவதிகைக்குச் சென்றார்.

தம்பியின் துயர்வினைக் கண்டார் திலக வதியார். தாயாகவே குரு போல் விபூதி கொடுத்தார்.

திருவாளன் திருநீற்றை உருவார அணிந்தார். மருணீக்கியார். உடனாகக் கோயிலினுள் கொடு புகுந்தார். தரணியில் வாசில் வீழ்ந்தார். தம்பிரான் திருவருளால் உரைத்த தமிழ்மாலைகள் சாற்றும் உணர்வுபெற உணர்ந்து "கூற்றாயின வாறு என எடுத்து உரைத்தருளினா. இவ்வாறே மற்றைய பதிகங்களின் பயன் தெளிய அருண்மொழித் தேவரின் அருள்வாக்குப் பெருந்துணை புரியும்.

An adverse fate produces folly, and a prosperous fate produces enlarged knowledge. 372.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி......

# சிவப்பிரகாசம்

மட்டுவில் ஆ. நடராசா

## அவத்தை இலக்கணம்

எண்ணாலுன் றிலாத தீதம் எய்திய துரியத் தொன்று
நண்ணிடும் சுழுத்தி தன்னில் நயந்துள தொன்றுமின்னும்
அண்ணிடும் கனவு தன்னில் ஆறேழாம் சாக்கி ரத்தின்
கண்ணுறும் அஞ்சா றாய கருவிகள் மருவுந் தானே. 60

இ-ள்: எண்ணான் ஒன்று இலாதது அதீதம் - எண்ணுதற்கு ஒரு கருவியும் இல்லாது புருடன் மாத்திரம் இருப்பது துரியாதீதம் ஆகும். எய்திய துரியத்து ஒன்று நண்ணிடும் - அதன்பின் பொருந்திய துரியத்தில் பிராணவாயு என்னும் ஒரு கருவி பொருந்தும். சுழுத்தி தன்னில் நயந்து உளது ஒன்று - சுழுத்தியில் இருப்பது சித்தமென்னும் கருவியாகும். கனவு தன்னில் ஆறு ஏழாம் சொப்பனத்தில் சத்தாதி ஐந்தும் வசனாதி ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் மூன்றும் ஆகிய பதின்மூன்று கருவிகள் தொழிற்படும். பின்னும்

அண்ணிடும் - இவற்றுடன் வாயுக்களில் பிராண வாயுவைத் தவிர்ந்த ஒன்பது வாயுக்களும் பொருந்தும். சாக்கிரத்தின் கண் அஞ்சு ஆய உறும் - சாக்கிரத்தில் ஐந்து என்னும் எண்ணிக்கையுடையனவாகிய ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பொருந்தும், கருவிகள் மருவும் ஆறு தானே - கருவிகள் பொருந்தும் முறை இதுவாகும். எ - று.

சாக்கிரம் - நனவு, சொப்பனம் - கனவு, சுழுத்தி - துயில்

ஆன்ம தத்துவ தாத்துவிகங்களுடன் கூடி விடயங்களை அறிந்து அனுபவிக்கும் நிலை சகலாவத்தை எனப்படும். காரணாவத்தை கேவலம், சகலம், சுத்தமென மூன்றுவகைப் படுவது போலவே சகலாவத்தையும் கேவலம் சகலம் சுத்தமென மூவகைப்படும்.

இவை யொவ்வொன்றும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமென ஐந்து வகைப் பட்டுச் சகலாவத்தை பதினைந்து விரிபடும்.

கீழாலவத்தையிற் துரியாதீதம் கேவலத்தின் தன்மையை ஒத்திருத்தலால் அது காரிய கேவலம் எனப்படும். அதனால் கீழாலவத்தையில் துரியாதீதத்தைக் கேவலமெனவும், மத்தியாலவத்தையில் நிகழும் ஐந்தவத்தைகளும் கீழாலவத்தையில் துரியாதீதத்தைத் தவிர்ந்த நான்கு அவத்தைகளுமாகிய ஒன்பது அவத்தைகளையும் சகலத்திற் சகலமெனவும் கூறுவாருமுண்டு.

இச்செய்யுளிற் கூறப்படுவது சகலத்திற் கேவலம். இது காரிய கேவலமென்றும் கீழாலவத்தை என்றுஞ் சொல்லப்படும். இவ்வவத்தையில் ஆன்மா விடயங்களை அறிந்து அனுபவிப்பது. கீழ் நோக்கிச் சென்று ஐந்தவத்தைப்படும். அவை வருமாறு.

சாக்கிரம்: இது கீழ் நோக்கிய சாக்கிரம், சொப்பனம் முதலிய அவத்தைகளுக்குரியது. நித்திரை செய்ய நினைத்துப் படுத்திருக்கும் போது, நித்திரை வருவதற்கு முந்திய நிலை. இந்நிலையிற் சாக்கிரத்திற் தொழிற்படுங் கருவிகள் அனைத்தும் தொழிற்படுமாயினும் ஞானேந்திரியம் கன்மேந்திரியம் என்பவற்றின் தொழிற்பாடு

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாகவே நிகழும். அதனால் இச் சாக்கிரம் [illegible] சாக்கிரம் எனப்படும். இவ்வவத்தைக் குரிய தானம் இலாடத் தானத்திலிருந்து கண்டம் வரையுமாகும்.

பிரதிபா - விளக்கமான அறிவு இலாடம் - நெற்றி
இவ்வவத்தையிற் தொழிற்படுங் கருவிகள்:

| | | |
|---|---|---|
| ஞானேந்திரியங்கள்: | மெய், வாய், கண், மூக்கு, செவி | 5 |
| கன்மேந்திரியங்கள்: | வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் | 5 |
| சத்தாதி: | ஓசை, நாற்றம், ஒளி, சுவை, பரிசம் | 5 |
| வசனாதி: | வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் | 5 |
| அந்தக்கரணங்கள்: | மனம், புத்தி, சித்தம், அகங்காரம் | 4 |
| புருடன் | | 1 |
| வாயுக்கள்: | அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன், பிராணன் | 10 |
| மொத்தம் : | | 35 |

**சொப்பனம்:** இதற்குரிய தானம் கண்டம். தொழிற்படுங் கருவிகள்: சாக்கிராவத்தையிற் தொழிற்படுங் கருவிகளில் ஞானேந்திரியமும் கன்மேந்திரியமும் தவிர்ந்த இருபத்தைந்து.

**சுழுத்தி:** இதற்குரிய தானம் இதயம். தொழிற்படுங் கருவிகள்: சித்தம் பிராணன் புருடன் என்னும் மூன்று.

**துரியம்:** இதற்குரிய தானம் உந்தி. தொழிற்படுங் கருவிகள் பிராணன் புருடன் என்னும் இரண்டு.

**துரியாதீதம்:** இதற்குரிய தானம் மூலாதாரம். தொழிற்படும் கருவி புருடன் மாத்திரம்.

ஆன்மா அவத்தைப்படுமிடங்களையும் அவத்தைப்படும்போது கூடும்கருவிகளின் தொகையையும் பின்வரும் வெண்பா உரைக்கும்.

*'நுதல் முதற்றானத்தில் நாலேழும் ஏழும்*
*கலந்திருபத் தைந்தும் களத்தில் - நினைவாம்*
*சுழுமுனை ஒருமூன்றாம் வயிற்றில் துரியம்*
*எழிலாம் மூலத்திரண் டொன்று.'*

**இவ்வகை அவத்தை தன்னில் எய்திடும் கரணமெல்லாம்**
**மெய்வகை இடத்தி னூற்று மேவுமா கண்டு மிக்க**
**பொய்வகைப் பவம் அகற்றப் புரிந்திடில் அருளா லிங்கு**
**ஐவகை அவத்தை உய்க்கும் அறிவினால் அறிந்து கொள்ளே. 61**

இ-ள்: இவ் வகை அவத்தை தன்னில் - இந்த ஐந்துவகையான அவத்தைகளில், கரணம் எல்லாம் எய்திடும் மெய்வகை இடத்தில் - கருவிகள் எல்லாம் பொருந்துகின்ற சரீரத்தின் கூறுபாடான இடத்தானத்தில், உற்றுமேவுமா கண்டு - ஐந்தவத்தையும் பொருந்தியிருத்தலையும் விடயங்க [illegible] உவமையாகக் காட்டுவர்.

இதனை,

***'விரும்பு மரும்பொருளை விற்று மயங்கல்***
***இரந்த வணிகன் பெறுகை - வருந்தறிவு***
***தோன்றுத லையம் விருந்தவிடம் தோன்றுதலென்***
***றான்றவைந்தும் சாக்கிரத்தி னாம்'***

என்றும் வெண்பாவுரைக்கும்.

திருவருளைப் பொருந்தி ஞானநிட்டை கூடாதவிடத்துக் குறிப்புப் பாவனை செய்து உபாயநிட்டை கூடுவர். குறிப்புப் பாவனையைத், சிவன் தனக்கு அருள் செய்யும் போது கொண்டருளிய உருவத்தில் அறிவை நிறுத்தி ஐந்தவத்தைப் படுவர். இவ்வைந்தவத்தைகள் நின்மலசாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் எனப்படும்.

இதயத்திலிருந்து மேல்நோக்குதல் முறையாய், இருதயம், கண்டம், நாக்கின் அடி, இலாடம், பிரமரந்திரம் என்னும் இடங்களில் நிகழ்வது மேலாலவத்தை. இது காரிய சுத்தாவத்தை என்றும் சொல்லப்படும்.

அருளாலே தன்னை அறிவது நின்மல சாக்கிரம். தன்செயலற்று அவ்வருளே தனக் காதாரமாய் அவ்வருளில் நின்று அவ்வருளைத்

*Although a man may study the most polished treatises, the knowledge which has been decreed to him will still prevail.* 373

துரிசிப்பது நின்மலசொப்பனம். ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகள் தோன்றாது அந்த அருளே தானாகி நிற்றல் நின்மல சுழுத்தி. மலவாசனை சிறிதுமின்றி ஆனந்த ஒளி தோன்றுமிடம் நின்மல துரியம். ஆனந்தானுபவத்தைப்பெற்று அழுந்தியமைவதும்.

தானுமின்றி ஆனந்தமயமாய் நிற்கும் முதல்வனுமின்றி அவ்வானந்தமே தானாய் அழுந்தப்பட்ட இடம் நின்மலதுரியாதீதம்.

மத்தியாலவத்தையில் அநுபவத்தைப்படும் ஆன்மா ஐம்பொறிகள் வழியாக வரும் அந்தக் கரணங்களால் அறிவதும் விடுவதுமாயிருக்கும் இவ்வாறு விடயங்களைப் பற்றுவதும் விடுவதும் நினைப்பு மறப்பாகிய சகல கேவலங்களாகும். இவ்வாறு சகல கேவலப்படுவது ஆன்மாவின் இயல்பன்றெனவும் இந்திரியங்களையும் அந்தக் கரணங்களையும் கூடியதன் விளைவெனவும் இவற்றைக் கூடியதனால் தோன்றும் விடய போதமே பிறவிக்குக் காரணமெனவும் அறிந்து கருவிகளும் விடயங்களும் தாமல்ல எனும் குருவின் உபதேசப்படி நின்று சாதனைபுரியின் மேற்கூறிய நின்மல சாக்கிரம் முதலிய அவத்தைகள் நிகழும்.

நீக்கமில் அதீத மாக நிறைந்ததே வலமா நிர்மல
சாக்கிரங் கலாதி சேர்ந்த சகலமாந் தன்மை யாகும்
ஆக்கமில் இரண்டும் கூடா தொழிவதோர் நிலையில் நிற்கும்
சாக்கிர தீதம் சுத்தத் தகைமைய தாகுந் தானே. 62

இ-ள்: நீக்கமில் அதீதம் - காரியகேவலத்தில் கருவிகள் நீங்கி அஞ்ஞானம் நீங்காத துரியாதீதமான மாசு நிறைந்த கேவலமாம் நிர்மல ஆகும். - ஆணவ மலம் நிறைந்திருக்கின்ற காரண கேவலத்தின் தன்மை யுடையதாகும், சாக்கிரம் கலாதி சேர்ந்த சகலமாம் தன்மை ஆகும். - சாக்கிரமானது கலை முதலான தத்துவங்கள் சேர்ந்து தொழிற்படும் காரண சகலத்தின் தன்மை யுடையதாகும். இரண்டும் கூடாது வலிமையில் ஒழிய ஓர் நிலையில் நிற்கும் சாக்கிராதீதம் - மயக்கத்தைச் செய்கின்ற கேவலமும் விபரீதத்தைச் செய்கின்ற சகலமும் தாக்காது வலிமை ஒழிய ஒப்பற்ற அருள் நிலையில் நிலைபெற்றிருக்கும் சாக்கிராதீதமானது, சுத்தத்தன்மையது ஆகும். - காரண சுத்தாவத்தையின் தன்மையுடையதாகும். எ-று.

நீக்கமில் அதீதம் என்றது கீழாலவத்தையில் நிகழும் துரியாதீதத்தை. மாசு நிறைந்த கேவலம் என்றது ஆன்மா தனது இச்சா ஞானக் கிரியைகள் சிறிதும் விளங்குதல் இன்றி ஆணவமலத்தால் மறைக்கப்பட்டிருக்கும் காரண கேவலத்தை.

சாக்கிரம் என்றது மத்தியாலவத்தையில் நிகழும் சாக்கிரத்தை. கலாதி சேர்ந்த சகலம் - காரண சகலம். இது ஆன்மா கலை முதலிய தத்துவங்களோடு கூடி நின்று படைப்புக் காலந் தொடங்கிச் சங்கார காலம் வரை கன்மத்துக்கீடாகப் பிறந்திறந்து சுவர்க்க நரகங்களுக்குச் சென்று இன்ப துன்பங்களை அனுபவித்துத் திரியும் நிலை.

சாக்கிராதீதம் - சகலகேவலங்களிற் பொருந்தாமலும் தற்போத முனைப்பின்றியும் சிவத்தோடு ஏகனாகி நிற்கும் நிலை.

சுத்தத்தகைமை - பரமுத்திநிலை

(மிகுதி அடுத்த இதழில்)

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திராக்கம்

அரு. சொக்கலால், [illegible]
[illegible]
செ. கந்தசத்தியதாசன்
B.A.(Hons)(Hindu Civ.)(Jaf.), Dip.in.Edu.(Jaf)

சிவனைக் குறிக்கும் அடையாளங்களைச் சிவசின்னம் என்பர். ஒரு நாட்டின் கொடியை, சின்னத்தை வைத்துக்கொண்டு அந்நாட்டை அறிவது போலச் சிவசின்னங்களை வைத்துச் சிவனை அறியலாம். திருநீறு உருத்திராக்கம் என்பன சிவசின்னங்களாகும். இவ்விரு சின்னங்களையும் அணியவேண்டியவையாம். திருநீறு வியர்வைகளாலும் வேலை செய்வதனாலும் ஒருவரிடத்திலிருந்து நீங்கி விடலாம் எந்நேரமும் நீங்காது தரித்திருப்பது உருத்திராக்கம் ஆகும்.

மகாருத்திரமூர்த்தி முருகனுக்குக் கூறும்போது உருத்திராக்கம் என்பது உருத்திரனின் கண் என்கிறார். முன்னொரு காலத்திலே திரிபுரத்து அசுரர்கள் செய்த கொடுமைகளைத் தாங்கவொண்ணாத தேவர்கள் என்னிடம் வந்து முறையிட்ட போது யான் கண்களை மூடி ஆயிரம் திவ்விய வருஷங்கள் மகாயந்திரத்தைச் சிந்தனை செய்து கண்களைத் திறந்தபோது எனது மூன்று கண்களிலிருந்தும் ஜலத்துளிகள் விழுந்தன அத்துளிகளே உருத்திராக்க விருட்சமாயிற்று. அதன் பழங்களே (பொரிப்பழம்) உருத்திராக்கமாயின எனது சூரியக் கண்ணிலிருந்து பன்னிரண்டுவகையான விருட்சம் தோன்றியது. இவை கபிலநிற மணிகள் இடது கண்களில் (சந்திரன்) இருந்து 16 வகையான உருத்திராக்கம் தோன்றின இவை வெள்ளைநிற மணிகள் நடுவிலுள்ள நெற்றிக் கண்ணிலிருந்து (அக்கினி) 10 வகையான விருட்சம் தோன்றியது இவை கருப்புநிற மணிகள் இம்மரங்கள் இந்தோனேசியா, கிழக்காசியா, மலேசியா, அவுஸ்திரேலியா, பசுபிக் தீவுகள், நேபாளம், இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இப்போது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் தெல்லிப்பழை துர்க்காதேவி கோயில் அளவெட்டி நாகவரத நாரயணர் கோவில்போன்ற இடங்களிலும் வளர்க்கப் படுகின்றது.

உருத்திரனின் கண்ணிலிருந்து தோன்றியமையால் உருத்திராக்கம் என்று அழைக்கப் படுகிறது. அக்கம் என்றால் கண் எனப் பொருள்படும் இதனால் இது அட்சமணி அக்குமணி, சிவாக்ஷி கண்மணி எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. பாவங்களைக் கண்டிப்பதால் கண்டிகை என்றும் இதை அழைப்பர்.

இம்மணிகளுள் ஒன்று முதல் 16 முகம்வரை காணப்படுகின்றது. இவ்வாறு முப்பத்தெட்டுவகை உருத்திராக்கம் உண்டு. இம்முகமணிகளையும் அதிதேவதைகளையும் இவ்வுருத்திராக்க மணிகளை அணிவதால் நீங்கும் தோஷங்களையும் உருவாகும் மங்களங்களையும் சுருக்கமாக நோக்குவோம்.

| | அதிதேவதை | நீக்குபவை | நற்பலன் |
|---|---|---|---|
| 1. முகம் | சிவபெருமான் | பிரமகத்திதோஷம் நீங்கும் | மங்களம், செல்வம் உண்டாகும். |
| 2. முகம் | ஸ்ரீகண்ட பரமசிவன் | கோகத்திதோஷம் நீங்கும் | லக்ஷ்மி கடாட்சம் தோன்றும் |
| 3. முகம் | அக்கினி | ஸ்திரிகத்தி தோஷம் நீங்கும் | குழந்தைப்பேறு உண்டாம் |

*There are (through fate) two different natures in the world; hence the difference (observable in men) in their acquisition of wealth, and in their attainment of knowledge.* 374

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 4. முகம் | பிரம்மன் | நரஹத்திதோஷம் நீங்கும் | பொருள், இன்பம், வீடு ஆகிய புருடார்த்தங்களை அளிக்கவல்லது |
| 5. முகம் | காலாக்கினிருத்திரர் | புசிக்கத்தகாதவற்றை புசித்த பாவத்தை போக்கவல்லது. | மனஅமைதி உண்டாகும். |
| 6. முகம் | முருகன் | பாவங்களை நீக்கவல்லது. இளமை கிடைக்கும். | ஆயுள் குழந்தைப்பாக்கியம் வீடு, உணவு கிடைக்கும். |
| 7. முகம் | ஆதிசேடன் | பசுக்கொலையால் வரும் பாவத்தையும் தங்கம் திருடுவதால் ஏற்படும் பாவத்தையும் போக்கும் | பொன் இரத்தினம் போன்றன கிடைக்கும் ஆபரணங்களை அவ்வாறு தரித்தல் |
| 8. முகம் | விநாயகர் | அபகரித்து உண்டபாவத்தையும் சில தானங்கள் பெறுவதால் ஏற்படும் பாவங்கள் நீங்கும் | அதிஷ்டம் கிடைக்கும். |
| 9. முகம் | வைரவர் | விசேஷங்களால் உண்டாகும் துன்பம் நீக்கும் சித்தி முத்தி அளிப்பது | புத்திமுத்தி சிவஞானம் கிடைக்கும். வாக்குச்சாதுரியம் அதிகரிக்கும். |
| 10. முகம் | திருமால் | கிரகங்களால் ஏற்படும் பீடையை நீக்கவல்லது. | பல்குடும்பங்கள் உயர்வடையும். |
| 11. முகம் | ஏகாதசருத்திரர் உருத்திரர் | யாகங்கள் செய்த பலனை அளிக்கும் விக்கினங்கள் நீங்கும் | அஸ்வமேதயாகப் பலன் கிடைக்கும் |
| 12. முகம் | துவாதச ஆதித்தியர் | பலவித தானங்கள் செய்த பலனைக் கொடுக்கும். | மனமகிழ்ச்சி உண்டாகும். |
| 13. முகம் | சுப்பிரமணியர் | பெற்றோர், சகோதரர், புத்திரரைக் கொன்ற பாவம் போகும் | நல்வாழ்வு கிடைக்கும் |
| 14. முகம் | சிவனும், சக்தியும் | சகல செல்வங்களையும் சிவபதத்தையும் தரவல்லது. | நல்வாழ்வு கிடைக்கும் |

18 முகமணிகளை வைத்துத் தூபதீபம் காட்டிப் பூஜித்தால் சிவபூஜைப்பலன் கிடைக்கும்.

இவ்வாறு உருத்திராக்கங்களை அணிவதால் எல்லாவகைப்பட்ட பாவங்களையும் போக்கிக்கொள்ளலாம். சிவனடியார்கள் இவ் உருத்திராக்கத்தைத் தம் உடலில் அணிந்துகொள்வர். சிவனடியார் இலக்கணம் கூறும்போது "ஆரம்கண்டிகை ஆடையும் கந்தையே......" என்றும் "மாசிலாத மணிதிகழ் மேனிமேல் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்......" என்றும் சேக்கிழார் கூறுகிறார். அதாவது "சிவஞானத்யாத்ரு ரூபா ரூபா" என்பதற்கிணங்க உருத்திராக்கத்தை அணிபவன் உருத்திரனே ஆகின்றான் என்பது தெளிவாகின்றது.

சேக்கிழார் அப்பர்பெருமான் போல்வினைக் கூறுகின்றபோது சிவசின்னம் ஏந்தும் அவர் சிவபெருமானின் சேவடியைச் சிந்தனை செய்பவர்களாய் இருப்பர் என்கின்றார்.

*"தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகி...."*

எனும் போது உருத்திராக்கம் தாழ் வடம் எனச் சுட்டப்படுவதையும் காணலாம்.

உருத்திராக்கமானது தலை, காது, கழுத்து, மார்பு, புயம் மணிக்கட்டு ஆகிய உறுப்புகளில்

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியத்தக்கது. மாலைகளைக் கோர்க்கும்போது அவற்றில் அமையத்தக்க உருத்திராக்க மணிகளுக்கு எண்ணிக்கை வரம்பு இருக்கின்றது. மாலைகளைக் கோக்கும்போது இந்த எண்ணிக்கை மாறக்கூடாது. இது 8/9இன் மடங்கில் இருக்கலாம். அதாவது உச்சியாகிய குடுமியில் 1மணியும் தலையில் 36 மணியும் காதுகள் ஒவ்வொன்றுக்கும் 1/3/6 மணிகளும், கழுத்து 1/27/32 (சிவாகமம் 28 + வேதம் 4) மணியும் மார்பு 54/108 மணியும் தனித்தனியே புயத்தில் 16 மணியும் மணிக்கட்டில் 12 மணிகளும் பூணூலில் ஒருமணியும் அணிய வேண்டும். மேற்கூறிய 7 உறுப்புக்கள் தவிர வேறு உறுப்புக்களில் உருத்திராட்சம் அணிதல் குற்றமாகும்.

உருத்திராட்ச மணிகளைப் பட்டுநூல், தங்கம், வெள்ளி, பித்தளை, செப்புநூல் (கம்பி) போன்றவற்றில் மாலைகளாகக் கோர்க்கலாம். ஆனால் ஒரு உருத்திராட்சம் மற்ற மணிகளுடன் முட்டத் தொடுக்கக்கூடாது. இதற்காக இடையில் பவளம், ஸ்படிகம், மரகதமணி, முத்து, தாமரைமணி போன்றவற்றை விரும்பியவாறு கோக்கலாம். மேலும் மாலைகளைக் கோக்கும் போது ஒரேயளவான உருத்திராக்க மணிகளையே பயன்படுத்த வேண்டும். மேலும் உருத்திராக்க மணியின் துளைப்பக்கங்கள் இரண்டிற்கும் பொன், வெள்ளி கவசத்தடுகளை இணைக்கலாம். ஆனால் அவை உருத்திராக்கத்தின் பெரும் பகுதியை மறைக்கக் கூடாது. இம்மாலைகளைக் கோர்க்கும்போது பஞ்சாட்சரமந்திரம், தோத்திரங்கள் என்பவற்றை ஓதிக்கொண்டே இருத்தல் வேண்டும். மேலும் ஒருமுகம் முதல் 16 முகங்கள் வரை அமைந்த உருத்திராட்சங்களைக் கோர்த்துச் செய்வது "இந்திரமாலை" எனப்படும். இது உருத்திராட்ச மாலைகளில் மிக உயர்ந்தது, சிறந்தது வரம்பற்ற பலன்களைத் தரக்கூடியது. மார்பில் அணியும் 54/108 மணிகளைக் கொண்ட தாழ்வடத்தை ஜபமாலையாகப் பயன்படுத்தலாம். இங்ஙனம் பஞ்சாட்சர மந்திரத்தை ஜபிக்கும்போது அதன் எண்ணிக்கை முக்கியமாதலால் இம்மணிகளைத் தொட்டுத்தொட்டு நமசிவாய என உச்சரித்து எண்ணிக்கொள்வர். ஜபம் செய்யும் வேளையில் உருத்திராட்சமாலையை மறைத்து வைத்துக் கொண்டு எண்ணுதல் வேண்டும்.

சிவாய நம என்று நீறணிந்து ஓம் நமசிவாய என உச்சரித்துக் கொண்டு அணிதல் வேண்டும். தீய எண்ணங்கள் இல்லாதவர், கடவுள் நம்பிக்கை உடையவரெவரும் அணியலாம். என்றாலும் உருத்திராட்சம் சிவனுடன் நெருங்கிய தொடர்புடையதால் சிவபூசைக்கிரியைகள் செய்யும்போது கட்டாயம் அணிய வேண்டும்.

பூமாலை கண்டிகையினை பூசை புரிவார் பலத்தைக்
காணார் எவரே கழுமலை - நாணாதே
பூண்டு சிவபூசை புரிவார் புகுந்து மோட்சத்தைக்
கண்டிருப்பார் ஈசன் கழல். - உருத்திராக்க வசிட்ட-

பரமசிவன் ஆலயன் பக்தர்க்குச் சின்னம்
உருவுடலிற் கண்டியும் நீறும்.

புண்ணியத்திற்குக் கண்டியினைக் கூசியிடும் பக்தியரைக்
காண்பதற்குக் கூசும் அரனைத்து. - சைவ சமய நெறி

மேலும் திருக்கோயிற்பூசை சந்நிதானத் தரிசனத்தின்போதும், சிவபூசை ஜெபத்தின்போதும் சிவத்தியானத்தின்போதும் சிவபுராணத்தைப் படிக்கும் போதும் பிறர் சிவபுராணத்தைப் படிக்கக் கேட்கும்போதும் பஞ்சாட்சரமந்திர பாராயணத்தின்போதும், சைவசமயச் சொற்பொழிவின் போதும் அணிதல் வேண்டும். உருத்திராட்ச மாலைகளை தாய் பிள்ளையின் நோய்க்காக மருந்துண்பது போல சிவனே உருத்திராட்ச மாலைகளை அணிந்திருக்கின்றார் என்றும் குறிப்பிடத்தக்கது.

உருத்திராட்ச மணிகளை திருநீறு போல எந்தநேரமும் அணிந்திருக்கக்கூடாது. உறங்கும்

*In the acquisition of property, everything favourable becomes unfavourable; and too the other hand everything unfavourable becomes favourable through the power of fate.* - 375

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும், உடற்சுகயோகத்தின்போதும், மலசலம் கழிக்கும்போதும் உடம்பு தூய்மையில்லாத போதும், வீட்டின் தூய்மைகெடும்போதும் பிறப்பு இறப்பு ஆகிய காலங்களிலும் உருத்திராக்கம் தரிக்கக் கூடாது. இவ் வேளையில் பூசையறையில் தூய்மையான இடத்தில் பாதுகாப்பாக வைக்கவேண்டும். மாமிசம் புசிப்போருக்கும், மதுபானம் அருந்துவோரும் புகையிலை போன்றவற்றைப் புகைப்போரும் உருத்திராக்க மாலையை அணியக்கூடாது.

ஒருமுக உருத்திராட்சம், 11 முக உருத்திராட்சங்களைச் சிவலிங்கமாகவே வைத்துப் பூசிக்கலாம் விசேட தீட்சை பெற்றவர்கள் சிவ பூஜை செய்வதற்கு இவ் உருத்திராட்சம் சுயம்புலிங்கம் போல் அமையும்.

இவ்வாறு போற்றப்படும் உருத்திராட்சம் தூயதாக இருக்கிறதா என அறிவதற்கு இரண்டு செப்புத்தகடுகளுக்கிடையில், செப்பு நாணயங் களுக்கிடையிலும் ஒரு உருத்திராக்க மணியை வைத்து மென்மையாகக் கையினால் பற்றினால் அது மெதுவாகச் சுற்றுவதைக் காணலாம். தானே சுழல்வதற்குரிய அபூர்வசக்தி உருத்திராட்சத்திடமே இருக்கிறது.

## உருத்திராட்சத்தின் மருத்துவக்குணம்

உருத்திராட்சம் என்ற ஒன்று இன்று எமக்குப் பலருக்குத் தெரியாதிருக்கலாம். அவற்றை முனிவர்கள் மட்டுமே அணிவதாகத்தான் சிலர் கூறுவார்கள். இவ்வாறில்லை இந்தியாவில் பிரதமராக இருந்த இந்திராகாந்தி மேற்குலகில் பிரபல வயலின் மேதை ஜெஹுதிமெனுஹின் ஆகியோர் கூட இதனை அணிந்திருக்கிறார்கள். இவ்வாறான "உருத்திராட்சம்" என்பதுதான் என்ன? "உருத்திராட்சம்" என்பது செயற்கையாகத் தயாரிக்கப்படும் ஒன்றல்ல "பெர்ரி" (எலியோகார்பஸ் கனிட்ரஸ்) என்னும் பழத்திலிருந்தே உருத்திராட்சம் உருவாக்கப்படுகின்றதாம். இந்தப் பெர்ரி மரங்கள் ஆரம்பத்தில் இந்தோனேசியாவிலேயே காணப்பட்டன. ஆனால் தற்போது நேபாளத்திலும், இந்தியாவிலும், இலங்கையிலும் அவை வளர்க்கப் படுகின்றன.

சைவசமயம் விஞ்ஞான அறிவியலோடு தொடர்பு கொண்டது. அந்த வகையிலே இவ்வுருத்திராட்சமும் மிக முக்கியமானதாகும். பொதுவாக முனிவர்கள், சமயகுரவர்கள், தீட்சைபெற்றோரே 'உருத்திராக்க மாலை'யை அணிந்திருப்பார்கள். அதை சைவ சமயத்தின் அடையாளச் சின்னமாக அவர்கள் அணிவதாகவே நாம் கருதி வருகின்றோம். ஆனால் அது சைவசமயத்தின் சின்னம் மட்டுமன்றி மருத்துவக் குணங்களும் கொண்டிருப்பதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

இரத்த அழுத்தம் அதிகரித்துக் காணப்படுவோரும் மன அழுத்தத்தால் கஷ்ட முறுவோரும் உருத்திராட்சம் அணிவதால் அவற்றை இல்லா தொழிக்கலாம் என்று கூறப்படுகின்றது.

வயிற்று உபாதையால் கஷ்டப்படுவோர் உருத்திராட்சத்தை முதல்நாள் நீரில் ஊறவைத்துக் மறுநாள் காலையில் அந்த நீரைப் பருகினால் வயிற்று உபாதை இருந்த இடமே தெரியாமல் போய்விடுமாம். ஆனால் உருத்திராட்சத்தை அணிவோர் அதனைக் குணமாக்கும் சக்தி மீது நம்பிக்கை வைத்தல் அவசியம்.

உருத்திராக்கம் வயது முதிர்ந்தோரின் மூட்டுவாதத்தையும் குணமாக்குகின்றதாம். உருத்திராட்சத்தில் ஒரு முகம் கொண்டவை இரு முகம் கொண்டவை எனப் பல வகையுண்டு. அவற்றின் வகைவேறுபாட்டிற்கேற்ப நோய் நீக்கமாகும், குணமும் வேறுபடும்.

அக்குபஞ்சரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப் பீர்கள் மனிதனின் உடலில் பல நிலைகளில் ஊசிகளைச் செலுத்துவதன் மூலம் நோய்களைக் குணமாக்குகின்றனர். அவ்வாறான அக்குபஞ்சர் சிகிச்சை கொடுக்கும் விளைவுகளை உருத்திராட்சம் கொடுக்கின்றனவாம்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திராட்சங்களில் பலவகையுண்டு என்று மேலே பார்த்தோம் அல்லவா? உருத்திராட்சங்களில் 38 வகைகளில் 21 வகைகள் மருத்துவரீதியான முக்கியத்துவம் வாய்ந்தவை. அரிப்பாக ஏழுமுக உருத்திராட்சங்கள் மிகவும் அரிதாகக் கிடைப்பவை அவை வீட்டில் செல்வத்தைக் கொழிக்கச் செய்வதாக நம்பப்படுகின்றது. இதனால் அதனை வைத்திருப்போர் அதனை மிகுந்த கவனத்துடன் போற்றிப்பாதுகாப்பாக வைத்திருப்பர்.

மூன்று முக உருத்திராட்சத்தை அணியும் பெண்களாயின் ஆண்களையும், ஆண்களாயின் பெண்களையும் கவரும் எனவே இளைஞர்கள் யுவதிகள் இதனை விரும்பி அணிகின்றனர்.

அறுமுகம் கொண்ட உருத்திராட்சத்தை வியாபாரிகள் வைத்திருப்பது நல்லது எனக் கூறப்படுகின்றது. ஏனெனில் வியாபாரிகளுக்கு என்றும் இலாபத்தையே கொடுக்கும். அவ்வாறே எண்முக உருத்திராட்சங்கள் எமக்கு அதிஷ்டத்தை விளைவிக்கும் அதேவேளை ஒன்பது முகங்கொண்டவை மனது வாக்குச் சாதுரியத்தை அதிகரிக்கிறதாம்.

இவ்வாறு உருத்திராட்சத்தை அணிவதால் ஏற்படும் பலன்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். உருத்திராட்சம் பலவர்ணங்களில் காணப்படுகின்றது. வெள்ளை, கபிலம், மஞ்சள், கறுப்பு என அவற்றின் நிறங்கள் வேறுபடும். பொதுவாகப் கிரகணங்கள் வளர்பிறை பூரணை போன்ற நாட்களில் அவை அதிர்ஷ்டம் தருவதாகவும் சிலர் கருதுகின்றனர்.

கடைகளில் விற்பனை செய்யப்படும் எல்லாவற்றையும் தரமான உருத்திராட்சங்கள் என எண்ணி ஏமாந்துவிட வேண்டாம். உருத்திராட்சங்களை நீரில் போடுங்கள் அவை அமிழ்ந்தால் அவைதான் உண்மையான உருத்திராட்சம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உண்மையான உருத்திராட்சங்களைக் கண்டு பிடித்து, அவற்றை அணிவதன் மூலம் வாழ்க்கை வளமானதாக்குங்கள்

❀❀❀ ❀❀ ❀❀❀

---

பொல்லார்க்குக் கல்விவரில் கர்வமுண்டு
    மதனோடு பொருளுஞ் சேர்ந்தால்
சொல்லாதுஞ் சொல்லவைக்குஞ் சொற்சென்றால்
    குடிகெடுக்கத் துணிவர் கண்டாய்
நல்லோர்க்கிம் மூன்றுகுண முண்டாகி
    லருளதிக ஞானமுண்டாம்
எல்லோர்க்கு முபகார ராயிருந்து
    பரகதியை யெய்துவாரே.

தீக்குணமுடையவர்களுக்குக் கல்வியுண்டாயின் கர்வம் அதிகப்படும். அக்கல்வியோடு செல்வமுங் கூடினால் சொல்லத்தகாத வார்த்தைகளையுஞ் சொல்வார். தன் சொல் எங்கும் செல்லத்தக்கதாயிருந்தால், குடிகளைக் கெடுக்கவும் துணிவார்கள். நற்குண முடையார்க்குக் கல்வி, செல்வம், சொற்செல்வாக்கு ஆகிய இந்த மூன்றும் உண்டாயின் அருளும் ஞானமும் பெற்று யாவருக்கும் உபகாரிகளாக இருந்து முத்தியடைவார்.

-விவேகசிந்தாமணி

---

*Whatever is not conferred by fate cannot be preserved, although it be guarded with much care; and that which fate has made his, cannot be lost although he should undertake to throw it away.* 376

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானம்

-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்-

தானமாவது தருமநெறியால் வந்த பொருளைச் சற்பாத்திரமாயுள்ளவருக்குச் சிரத்தையோடு கொடுத்தல். பாவத்தால் வந்த பிறன் பொருளைக் கொடுத்தால், தருமம் பொருளுடையார் மேலும், பாவம் பொருள் கொடுத்தார் மேலும் நிற்கும். சிரத்தையென்னும் பிரீதியென்னும் ஆதரவென்னும் பத்தியென்னும் விசுவாசமென்னும் அன்பென்னும் பற்றென்னும் பொருந்தும்.

பதி சாத்திரத்தை ஓதி அதன்பொருளை அறிந்து பாவங்களை விலக்கித் தருமங்களை அநுட்டித்துக் கடவுளை மெய்யன்போடு வழிபடுவோரும், தம்மைப்போலப் பிறரும் பரகதிபெற்று உய்ய வேண்டுமென்று விரும்பி அவருக்கு நன்னெறியைப் போதிப்பவருமாயுள்ளவர் சற்பாத்திரமாவர். இந்த நன்னெறியிலே ஒழுகும் பொருட்டுச் சிரத்தையோடு முயற்சி செய்பவரும் சற்பாத்திரமாவர். குருடர், முடவர், சிறுகுழந்தைகள், தரித்திரர், வியாதியாளர், வயோதிகர் என்னும் இவர்களும் தானபாத்திரமாவர். அன்னமுதலியவற்றை இவர்களுக்குப் பண்ணலே தருமம்.

பதி சாத்திரத்தில் விருப்பமில்லாதோனும், நித்திய கருமத்தை விடுத்தோனும், சிவ நிந்தை செய்வோனும், குருநிந்தை செய்வோனும், தேவத் திரவியங் கவர்வோனும், கொலை செய்வோனும், புலை உண்போனும், கள் உண்போனும், களவுளோனும், பிறர் மனைவியைப் புணர்வோனும், வேசையைப் புணர்வோனும், தாசியைப் புணர்வோனும், கன்னியரைக் கெடுப்போனும், இருதுமதியைத் தீண்டுவோனும், பொய்ச்சான்று சொல்வோனும், பொய்வழக்குப் பேசுவோனும், பிதா மாதாவைப் பேணாதோனும், சூதாடுவோனும், மித்திர துரோகியும், கோள் மூட்டுவோனும், செய்ந்நன்றி மறப்போனும், புறங்கூறுவோனும், பாத்திரத் தில்லாத பொருளைப் புதிதாகப் பாடிப் பாட்டினால் ஒப்பிப்போனும், காட்டிக்குக் கொடுப்போனும், வேதாகமத்தை விற்றுத் திரவியந் தேடுவோனையும், பெண்ணாசை மிகுந்து தரும வேடங்களைக் காட்டிச் சனங்களை வஞ்சிப்போனும், பொருளை வைத்துக்கொண்டு தரித்திரன் போல நடித்து யாசிப்போனும், தொழில் செய்து சீவனம் பண்ணச் சத்தி இருந்தும் அது செய்யாத சோம்பேறியும், தீச்சிந்தை நிறைந்து பொய்யாசாரஞ் செய்து பொய் மரியாதைகாட்டித் திரிவோனுமாகிய இவர்களெல்லாம் அசற்பாத்திர மாவார்கள். இவர்களுக்குத் தானம் பண்ணல் பாவம். இவர்களுக்கு இன்சொல் சொல்லலும் பாவம். கற்றோணியாலே அழிபடு போலக் கல்வி அறிவொழுக்கம் இல்லாத பாவிக்குத் தானங் கொடுத்தவன் அப்பாவியோடு அழிந்துபோவான்.

சற்பாத்திரமாயுள்ள பெரியோர் தம் வீட்டுக்கு வந்தபொழுது, விரைவினோடு எழுந்திருத்தல், ஓடிச்சென்று கண்டவுடனே 'தேவரீர் எழுந்தருளப் பெற்றேனே' என்று கொண்டாடி எதிர்கொள்ளல், ஆசனத்திருத்தல், பாதத்தை அருச்சித்தல், 'இன்றன்றோ அடியேனுடைய வீடு சுத்தியாயிற்று' என்று அவரை உயர்த்திப் புகழ்தல், அவர்போம் போது பதினாறடியிற் குறையாமற் சென்று வழிவிடுதல் என்னும் இவை ஏழும் தானஞ் செய்வோர் செயல்களாம். இவையில்லாமற் செய்யும் தானம் பயன்படாது.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது. 377

பொருள்: [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரங்கள் எல்லாவற்றிலும் பரம சற்பாத்திரம் மெய்ஞ்ஞானி. அவர் ஒருவரிடத்தே சென்று 'எனக்கு இந்தப் பொருளைத் தா' என்று கேளார். அவர் எழுந்தருளியிருக்கும் இடத்திற் சென்று 'அடியேனுடைய பொருளை ஏற்றருளல் வேண்டும்', என்று பிரார்த்தித்துக் கொடுத்தல் வேண்டும். ஞானிகளாவர் தமக்குத் தாதாத் தரும் பொருளை அதன் மேல் ஆசையினால் வாங்கார்; தாதாப் பரகதியடைதல் வேண்டும் என்று விரும்பாது, தன்னுடைய போசனார்த்தத்தை விரும்பி தானத்தை ஏற்பன்; ஆதலால் அஞ்ஞானி கையிலே கொடுத்தவர் தம்பொருளை அவமே போட்டு இழந்தவராவர்.

தன்னிடத்து வந்த யாசகருக்குக் கொடுக்கப்படும் பொருள் அரிதாயின், அவர் மனத்தை முகமலர்ச்சியினாலும் இன்சொல்லினாலும் குளிர்விக்கலாமே. அவையும் அரியனவோ. அல்லவே. தன்னிடத்து வந்து இரந்த தரித்திரனை 'இவன் அற்பன்' என்று தள்ளிவிட்டும் 'செல்வத்தையுடைய பெரியவன் எங்கேயிருக்கிறான்' என்று கருதுவோன் மூடனாவான். இவன் கொடுக்கும் கொடையெல்லாம் அவனிடத்தே தனக்கு ஒருதீமை வருவிய செட்டாம்.

சௌசம், வணக்கம், சிரத்தை, திருப்தி, பொறுமை என்னும் ஐந்து முறைமையுடையவனே தாதா. இவையில்லாதவன் அதாதா. அருளும் ஆதரவு முறைமையுமுடைய தாதாவின் கையிலே ஏற்றவன் அந்தத் தாதாவினோடும் புண்ணிய போகத்தை அடைவன்; அருளும் ஆதரவுமில்லாதவனாகிய அதாதாவின் கையிலே ஏற்றவன் அந்த அதாதாவினோடும் நரகத்தை அடைவன்.

யாவரும் உச்சிக் காலத்தில் பசித்து வந்த ஏழைகளுக்கு இல்லை என்னாமல் முகமலர்ச்சியோடும் இன்சொல்லோடும் தம்மால் இயன்ற மட்டும் அன்னபானியங்கொடுத்துப் புசித்தல் வேண்டும். தாம் புசிக்கும்போது ஒருபிடியன்னமாயினுங் கொடுத்தல் ஒருவனுக்கும் அரியதன்று. இது யாவருக்கும் எளிதாகும். திருமூலநாயனாருடைய அருமைத்திருவாக்கைக் கேளுங்கள்.

## திருமந்திரம்

"யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."

பகற் காலத்தில் வந்த அதிதிக்குப் போசனங் கொடாத பாவத்திலும், இராக்காலத்தில் வந்த அதிதிக்குப் போசனங் கொடாத பாவம் எட்டு மடங்கதிகம். தயிர், பால், நெய் முதலிய உயர்ந்த பதார்த்தங்களை அதிதிக்குப் பரிமாறவில்லையோ அவைகளைத் தாமும் புசிக்கலாகாது. இரவிலே போசன காலத்தில் வந்தாலும் பின்பு வந்தாலும் சமயந் தப்பிப்போயிற்று என்று, வந்த அதிதியை அன்னங்கொடாது அனுப்பலாகாது. அதிதிக்கு அன்னங்கொடுக்க சத்தியில்லையாயினும், படுக்கை இளைப்பாறுமிடம் தாகதீர்த்தம் பிரியவசனம் என்னும் இவைகளையாயினும் உபசரித்தல் வேண்டும். அதிதி புறத்திருப்பத் தாம் புசிப்பவரும், பந்திவஞ்சனை செய்பவரும் கண்டமாலை நோயினால் வருந்துவர். சூரியாஸ்தமன காலத்திலே தம் வீட்டில் வந்து சேர்ந்தவருக்கு இடம் படுக்கை முதலியவைகளை கொடாதவர் நரகத்துன்பத்தை அநுபவித்து மறுபிறப்பிலே தாம் கைப்பிடித்த மனைவியரை இழந்து துக்கமுற்றுத் திரிவர்.

அதிதியானவன் வேற்றூரினின்று வழிப்போக்கனாய் அன்னத்துக்குரிய வேளையில் பெறும் பொருட்டு வருபவன். அவன் ஒரு நாளிருந்தால் தான் அதிதி எனப்படுவன். ஊரிலிருப்பவனையும் வேறொரு நிமித்தத்தினால் வருகிறவனையும் அன்னத்தின் பொருட்டு ஊர்தோறுந் திரிகின்றவனையும் அதிதி என்று கொள்ளலாகாது.

நன்றி - பாலபாடம்

Even those who gather together millions will only enjoy them as it has been determined by the Disposer [of all things]! 377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநீதி என்றும் நிலைக்கத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் அமரர் வித்துவான் வ. செல்லையா அவர்கள்

வாகீசகலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன் எம்.ஏ,
முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர்,
மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்,

சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா அவர்கள் அமரத்துவம் எய்திய செய்தி அறிந்து கலங்கினேன். இவ்வாழுந்தான் தொடர்புடையார் பேறு! என்னில் வித்துவான் வ. செல்லையா அவர்களும் அவரிலே நானும் மிக நிண்ட காலமாகவே குரு, சிஷ்ய பாவனைபன்னிய உள்ளுணர்வை இன்று வெளிப் படுத்தவேண்டிய தேவை வந்துள்ளது.

சைவசித்தாந்த நூல்களிலே நிரம்பிய அறிவாழம் கொண்டவர் வித்துவான் வ. செல்லையா அவர்கள். சாத்விக குணநலம் வாய்ந்தவர். இவர் பரோசாது இவரது எழுத்துக்களும் நிரம்பிய சைவசமய தத்துவங்கள் கொண்டவை; இவர் சைவப்பிரசாரக. எளிமைமிகு பயன்கள் இவரது எழுத்துக்களிலே உண்டு. அரிய பெரிய தத்துவங் களையெல்லாம் சரளமான மொழி நடையிலே எடுத்துப் பேசி விளக்கவல்லவர் வித்துவான் வ. செல்லையா அவர்கள் சைவநீதி எப்பொழுதும் விளங்க வேண்டும் என்று பெரிதும் ஆசைகொண்டு வாழ்ந்தவர். பல்வேறு சைவசமயப் பொருள் களிலேயும் கட்டுரைகளை எழுதியவர். தமது சிந்தனை முழுவதும் சிவன் பற்றியதாகவே செலவு செய்தவர்; தம் குடும்பம் உண்டு; பொறுப்புண்டு என்ற நிலைகளுக்கும் அப்பால் சைவாசாரம், சைவகலாசாரம், சைவப்பேரறிவு என்று சதாசிந்தித்துக்கொண்டு, சைவ மாநாடுகள், கருத்தரங்குகள், நூல் வெளியீடுகள், குருபூசைகள் விழாக்கள் என்பவற்றிலே தாமும் பங்கெடுத்துப் பெருமை சேர்த்ததுடன் பிறரை வழிப்படுத்தியும் இவற்றினை நடத்துவதற்கும் ஆலோசனை களையும் வழிகளையும் கூறி வழிநடத்தினார். சைவத்திலே தான்தனிச் சிறப்பு உண்டு என்று எப்பொழுதுமே கூறுவார் வித்துவான் வ. செல்லையா அவர்கள்.

இன்று கௌரவ ஆசிரியர் ஆலோசகராக இருந்தவர். வவுனியா ஸ்ரீ அகிலாண்டேசுவரர் சிவன் கோவிலை வெளியிட்ட மகாகும்பாபிஷேக மலரின் பிரதம ஆசிரியர் என்ற முறையில் ஆலோசனைகள் தந்து மலர் வெகு சிறப்புடன் அமைவதற்கு உறுதுணை புரிந்தவர் அமரர் வித்துவான் வ. செல்லையா அவர்கள் அவரது பங்களிப்பும் உதவிகளும் அறிவுரைகளும் எம்மால் என்றும் மறப்பதற்கப்பாலானவை.

கொழும்பில் நடைபெற்ற 'சைவமாநாடு' வித்துவான் வ. செல்லையா அவர்களுடைய ஆலோசனையுடனும் அவரது அருமைப்புதல்வன் திரு. செ. நவநீதகுமார் அவர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததமையினை இவ்விடத்து நாம் நினைவு கூர வேண்டியுள்ளது. பண்டிதைக்கு ஏற்பாடு செய்து ஒதுவார், ஆதீனத் தொடர்புடன் சுவாமிகள் ஆகியோரை அழைப்பித்துத் தம் மனம் மகிழு மாறும், சைவ உலகமாறும் கருத்தும் செலுத்திச் செயற்பட்டுச் செயற்பெற்றத்துடன் கொழும்பு பம்பலப்பிட்டியில் நிகழ்த்திய சைவமாநாடு வித்துவான் வ. செல்லையா அவர்களை என்றும் நினைக்கும் படி செய்து நிற்கும் என்பது துணிபு.

இருந்தவர், இறந்தார் என்றில்லாமல் நிலைத்தார் என்று பெருமைக்குரியார்களான நாவலர், விபுலானந்தர், விவேகானந்தர், நயினை இராமச்சந்திரா, ஏழாலை ஆத்மஜோதி, நா. முத்தையா, மணிபாகவதர் போன்றோர் பண்டிதர் சித்தாந்தசரபம், க. கணபதிப்பிள்ளை நினைந்தார் சிவத்தமிழ்ச் செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி இருந்தனர்.

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். 379
[illegible]

அமரர் கலாநிதி ஏழாலை பண்டிதர் மு. கந்தையா B.A. ஆகியோரது வரிசையில் வித்துவான் வ. செல்லையா அவர்களை எண்ணிப் பார்க்கலாம். 'இல்லறஞானி' எனும் நிலையைப் பெற்றவர். வித்துவான் வ. செல்லையா அவர்கள். 'பாசம்பரஞ்சோதிக்கு' என்று வாழ்ந்தவர் இவர். தமிழிலே 'உழைப்பு' என்று கூறுவதுண்டு. அத்தகு 'உள்ளனைத்தும் தம்மை அறிந்தோர்' நீதி எல்லாம் வைத்திருந்த பெரியார் இவரைத் தவிர அறிந்துணர்ந்தோர் இவரது தூய சிறப்பை நிராகரியார். மென்மொழி பேசுபவர் இப்பெரியார். நோகச் சொல்லாத குணத்தினர். அறிவுரைப் பாங்கோ, அடக்கும் பாங்கோ, வெறுப் பாங்கோ, ஆணவப்போக்கோ எதுவும் அறியாதவர். அன்புறு சிந்தையர். சைவச் சான்றோன்; திருமுறைப் பற்றாளன்; சித்தாந்தச் செம்மல். சைவத்தின் காவலர் என்று கூறினால் மிகையில்லை. மகாபூசணம், ஞானவிநோதன், சைவப் புலவர்மணி, வித்துவான் என்னும் பட்டங்கள் போன்ற இவர் மணி வெண்ணிற வெள்ளிற்று மேனியர் அன்னாரது பழுத்த சிவக்கோலம் வவுனியா மக்களது நீங்கா நினைவில் நிற்பது. தன் சைவத்தமிழ் உலகும் நினைந்து வைத்திருப்பது சைவமாநாட்டிலே வைக்கும் இந்திய ஆதீனச் சுவாமிகளால் பொன்னாடை போர்த்திப் பாராட்டுச் செய்தவர். ஞானவிருந்தீபர். வித்துவான் வ. செல்லையா அவர்கள்.

அவர்கள் விட்டுச் சென்ற செல்வங்கள் இரண்டு.

I. சைவநீதி

II. "சைவநீதி" ஆசிரியர் திரு. செ. நவநீதகுமார் எனும் சமய உணர்வுள்ள மைந்தன்; இளைஞன், சைவசமயப்பிரசாரகர், அறிஞர்.

தமிழ்கூறு நல்லுலகு, வித்துவான் வ. செல்லையா அவர்களது எழுத்துக்களைத் தொகுத்து நூலுருவிலே கொண்டுவர வெளியீடு செய்யத் துரித உதவிகள் செய்யவேண்டிய தேவையுள்ளது. வித்துவான் வ. செல்லையா அவர்கள் பற்றிய நினைவுச் சொற்பொழிவுகள் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். 'சைவசித்தாந்தம்' தொடர்பான அவரது பணி மேலும் வரைந்தெடுக்கப்படல் வேண்டும்.

வித்துவான் வ. செல்லையா அறநிதியம் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். சித்திரமேழி வாழ் சைவமக்கள் இப்பணிகளில் விழிப்புணர்ச்சி கொண்டு செயற்பட வேண்டிய காலம் கனிந்துள்ளது. இவ்வாறு சித்திரமேழி இடத்தின் பெயர் துலங்கப்பெறுவதையும், உலகு அறியவும் செய்யவேண்டிய எத்தனையோ பணிகள் நம் மண்ணின் மைந்தர்களுக்கு உண்டு.

இதன் மூலம் சைவநீதி சஞ்சிகையை வளர்த்து ஆதரித்து உதவிபுரிந்து மேலும் செழிக்கச் செய்வது அத்தியாவசியம். இதனை உணர்ந்து நடப்போர் உலகில் எல்லா வளங்களும் பெற்று நீடுவாழ்வார்கள். எனவே வித்துவான் வ. செல்லையா அவர்களுக்கு நாம் செய்யும் கைம்மாறு 'சைவநீதி' சஞ்சிகையைப் பொருளுதவி வழங்கிப் பெருக்கி மேலும் வெகு சிறப்பாக மலர்விப்பது இச்சிந்தனை மிகமிகப் பிரதானமானது. எத்தனை பேர் அக்கறை கொள்கிறார்கள் என்றுதான் சைவ உலகு பார்த்துக் கொண்டிருக்கிறது. மெய்யன்பர்களே இக்கட்டுரையைப் படிக்கும் அனைவரும் படித்தவுடனே 'சைவநீதி' ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களாலே இயன்ற பொருளுதவியை அவருக்கு நல்குங்கள்; அவர் 'சைவமாநாடு' சைவநீதி மலர்களைச் சைவ சமூகத்திற்கு அளிப்பார்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

*The destitute will renounce desire (and become ascetics) if fate do not make them suffer the hindrances; to which they are liable, and they pass away. 378*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறத்தின் பெருமை

*திருமுருக கிருபானந்தவாரியார்*

அறமாவது மனுமுதலிய நீதிநூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலுமாம். திருவள்ளுவர், பூதஞ்சேந்தனார், கணிமேதாவியார், அரசுசூடியார் ஆகிய சான்றோர்களால் செந்தமிழில் இன்னவை என வரையறுக்கப்பட்டதே அறமாகும். அஃது ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைப்படும். அவற்றுள்:

1) ஒழுக்கமாவது, அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அந்த அந்த நிலைக்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்.

2) வழக்காவது, ஒரு பொருளைத் தனித்தனியே எனதெனதென்றிருப்பார் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு, அப்பொருள்மேற் செல்லுவது. அது கடன்கோடல் முதல் பதினெட்டுப் பதத்ததாம்.

3) தண்டமாவது: அவ்வொழுக்க நெறியிலும் வழக்கு நெறியிலும் வழீஇனாரை அந்நெறி நிறுத்துதற் பொருட்டு ஒப்ப நாடி அதற்குத்தக்க ஒறுத்தல்.

இவற்றுள் வழக்குந் தண்டமும், உலகநெறி நிறுத்துதற் பயத்தனவாதல்லது ஒழுக்கம்போல் உயிர்க்கு உறுதி பயவாது. அதனால் உயிர்க்கு உறுதி பயக்கும் அவ்வொழுக்கத்தையே அறமென ஆன்றோர் வலியுறுத்தினர். அறத்திற்சிறந்த இல்லற ஒழுக்கத்தில் மனைவியொருமித்திருந்து செல்விருந் தோம்பி வருவிருந்து நோக்கித் தருமங்களை மேற்கொண்டு ஒழுகுவதே சிறந்த அறமாகும். இதனாலன்றோ அறத்தின் நுட்பத்தை நன்கு நுணுகி யாராய்ந்து உலகினருக்கு அறிவுறுத்த வந்த பொய்யாப்புலவராந் திருவள்ளுவர், 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று திருவாய் மலர்ந்தனர்.

இங்ஙனம் இல்லறமாகிய நல்லறத்தை மேற்கொண்டான் பொய் வஞ்சனைகளை முதலிய தீவினைகளை யொழிந்து நல் வழியில் பொருளை ஈட்டி, பிரமசரியம், வானப்பிரத்தம் சந்யாசம் என்னும் ஆச்சிரமங்களில் நின்ற இயல்புடைய மூவர்க்கு நல்லாற்றின் நின்ற துணையாக இருந்து உதவி செய்தல் வேண்டும். இதுவேயன்றி, தென்புலத்தார் தேவர்விருந்தினர் சுற்றத்தார் ஆகிய நால்வர்களுக்கும் பகுத்துக் கொடுத்துப் பின் எஞ்சி நின்றதை ஒருவன் உண்டு வருவானே யானால், அவனுடைய மரபு இந்நிலவுலகில் அழிவுறாது எப்போதும் நிலைபெற்று நிற்கும்.

"பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் லெஞ்ஞான்று மில்."

பொய்யாமொழி

அறத்தின் வழி நிற்பான் எக்காலத்தும் அழியாத புகழையும் இன்ப வீட்டையும் எளிதிற் பெறுவான். இதனையுன்னியே நீதி நூல் அருளிய ஔவைப்பிராட்டியார் முதலாவதாக,

'அறஞ் செய்ய விரும்பு'

என்றனர். இல்லறமார்க்கத்தின் முதலாங் கமாவது பிற உயிர்க்கு இடர் புரியாமையேயாம். எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்தல் வேண்டும். அருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்கசுவாமிகள் இறைவனிடத்தில் ஒரு வரம் வேண்டும் என்று கேட்கின்றார். என்ன வரத்தை விரும்பினார்? தமக்கு முத்தி வீடு வேண்டுமென்று விரும்பவில்லை. சித்தி வேண்டுமென்றும் கேட்டாரில்லை.

"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல்வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்பு செயல் வேண்டும்."

அன்பர்களே! நன்கு நோக்குங்கள். இராமலிங்க அடிகளுடைய உள்ளத்தில் கருணை ஊற்றெடுத்துத் ததும்புகிறது. விரதங்களுக் கெல்லாம் சிறந்த விரதம் கொல்லாவிரதமேயாம். அகிம்சா தருமமே மிகமேலான அறமென்று அறநூல்கள் முழங்குகின்றன. தாயுமானவரும் 'கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்கும்' என்றருளி யிருப்பதையும்

[illegible]

உடம்பைத்துணர்க. இக்கொல்லாமையே அறவினை யென்று தோட்டமையாது, உயிர்கொலை யொன்றே மற்றுள்ள பாவச் செய்கைகள் எல்லாவற்றையுந் தரும் என்றனர் பொய்யில் புலவர்.

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்"

இத்தகைய அறத்தின் பெருமையை உணர்ந்து அறஞ்செய்ய எண்ணுவான் ஒருவன், யாம் இப்பொழுது இளைய மாதலின் இறக்கு நான்று செய்து மெனக் கருதாது எக்கால் தருமசிந்தை யுண்டாயிற்றோ அக்கணமே அறம் புரிய வேண்டும். அங்ஙனஞ் செய்த அறம் இவ்வுடம்பினின்று உயிர்பிரிகின்ற காலத்தும் பிரியாத நம்முடன் வந்து மறுமைக்கும் உதவி செய்யும்.

கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்ற அறுசுவையாலமைந்த உணவு சுவையை பரிசாரகர் படைக்கும், இல்லாளோ அன்புகூர்ந்து பல இன்சொல் கூறி வேண்டி உண்பிக்கையில், ஒருவகையுண்டியில் ஒரு கவளமேயன்றி மற்றொன்றை நீக்கிப் புசித்த அத்தனைய பெருஞ் செல்வராயிருந்த பெருமக்களும், ஒரு காலத்தில் வறியவர்களாய் வேறோரிடத் திருந்து போய்க் கூழைப் பிரந்து உண்பார்கள் என்னில் செல்வம் நிலைத்திருப்பதாக எண்ணி அதனைக் காப்பாற்றுதக்கதன்று.

"அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கி யுண்டாரும் வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று."

-நாலடியார்

"குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்"

-அதிவீரராமர்

என்று செல்வ நிலையாமையைக் குறித்து ஆன்றோர் கூறிய அமுத மொழிகளை உன்னி, செல்வம் உள்ளபோதே பகிர்ந்தளித்துப் பல்லோரோடுமுண்டு பரகதிக்கு வழிதேடவேண்டும். இங்ஙனமின்றி, நாளைக்கு அறஞ்செய்வோம்; அடுத்த ஆண்டில் வருகின்ற, பூசத்திருநாளன்று அன்னதானஞ் செய்வோம் என்று எண்ணுவானேயானால் அவன் அதுகாறும் உயிருடன் இருப்பது நிச்சயமாகுமோ? மறுகணமே மாளினும் மாள்வான். பின்புறத்திலேயே கூற்றுவன் நிற்கிறான். அவன் எந்த நிமிடத்தில் உயிரைப் பற்றுவானோ தெரியாது. யாக்கையோ நிலையற்றது; நீர்மேற் குமிழிக்கு நிகரானது. "இன்றைக்கோ நாளைக்கோ இன்னு மறைநாழி கைக்கோ என்றைக்கோ ஆவியிழப்பு" என்ற முதுமொழிகளை நினைந்து தீயவைகளை விட்டு இயன்ற அளவில் தருமத்தைப் புரிதல் வேண்டும். இதனையே நம் அருணகிரியாரும், "இன்றைக் கன்றைக்கென நாடாது இடுக கடிது" என்று உபதேசித்தனர். சின்னியெடுகதும் சிறிய அளவினதாகிய ஓர் ஆலமரத்தின் விதையானது, மிகவும் ஓங்கி வளர்ந்து பல்கிளைகளுடன் தழைத்து நின்று பெரும நிழலைத் தருவது போல், தக்கார் கைப்பட்ட அறமானது, அற்பமாயினும் ஆகாயம் அற்பமாகும்படி மிகவும் வளர்ச்சியுறும்.

"உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங் - கறப்பயனும்
தான் சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்துவிடும்"

-நாலடியார்

"நெய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்" என்ற அருணகிரிப் பெருந்தகையின் அமுதமொழியையுங் காண்க.

தக்கார் தகாதவர் என்று பகுத்தறிந் தீவதே தானம் எனப்படும். அங்ஙனமின்றி வறியராய் வந்து ஏற்றார் யாவராயினும் இன்னார் இனியார் என்று நோக்காது ஈதலே தருமம் எனப்படும். தருமம் புரியும் ஆற்றலில்லாதார் தமக்கு எவ்வளவு சக்தியுண்டோ அவ்வளவாவது கரவாதளித்தல் வேண்டும். இதனை நோக்கியோ நற்றூதாரும்,

"இயல்வது கரவேல்" என்றனர்.

அதுவும் செய்யச் சக்தியில்லை யெனில் பிறர் தருமம் புரியுங்கால் குறுக்கே விழுந்து எதற்காக இப்படித் தருமம் புரிகிறாய்? சிறிது கொடுத்தால் போதாதோ என்று தடுக்காமலிருந்

How is it that those, who are pleased with good fortune, trouble themselves when evil comes, since both are equally the decree of fate? 379.

தால் போதும். அதுவே தருமம் புரிந்தது போலாகும். இதுபற்றியே ஒளவைப் பிராட்டியார் 'இயல்வது கரவேல்' என்று கூறினதோடமையாது அடுத்தாற் போல் "ஈவது விலக்கேல்" என்றனர். இதனைத் திருவள்ளுவரும்,

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்," என்றனர்.

அங்ஙனமாயின் நான் ஒருவரையும் தருமம் புரியுங்கால் தடுப்பதில்லை; அதுவே போதும் என்று அகம்பாவமான ஒருவன் எண்ணி வாளாவிடத்தல் கூடாதென "ஐயமிட்டுண்" என்றும் உபதேசித்தனர். இங்ஙனம் அறமார்க்கத்தின் பொன்மொழிகளை வற்புறுத்திக் கூறியருளிய அப்பெரியார்களுக்கு, நாம் என்ன கைம்மாறு செய்யவல்லேம்? "கன்றிப் பிளவளவு தினையளவு பங்கிட்டுண்கை" என்று நம் அருணகிரிநாத சுவாமிகள் அருளியபடி, நம்முடைய வருவாயில் ஒரு சிறிது பாகமாவது ஏழைகளுக்கென்று ஒதுக்கிவைத்து, அதனை அவர்களுக்கு அன்புடனீந்து மறுமைக்குமாறா நலனைத்தேடிக் கொள்ளல் வேண்டும்.

கடவுள் அறத்தின் வடிவமாக விளங்குகிறார். சிவபெருமானுக்கு 'அறவன்' என்றே ஒரு திருநாமம் உண்டு. நமது காரைக்கால் அம்மையார் கயிலாயவரை சென்று கண்ணுதல் கடவுளைக் கண்டு களித்து வரங்கேட்குங்கால், 'அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க' என்றார். சிவபெருமானுடைய ஊர்தியாகிய இடபம் அறத்தின் வடிவு; தருமவிடை என்று அதற்குப் பெயர். அத்தகைய அறவடிவுடைய ஆண்டவனை யனைத்தற்கு அறத்தினை மறவாத உளுற்றுதல் வேண்டும். "அறனை மறவேல்" என்ற திருவாக்கையும் உற்றுநோக்குக. இத்தருமமே எல்லாநலன் களையும் அந்த இறைவன் திருவடியிற் சேர்க்கும்.

தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்

-கந்தபுராணம்

செய்யாள்கூடிவிளே!

வரையாது கொடுத்த வள்ளல்கள் வாழ்ந்த நாடன்றோ நம் நாடு. வறுமையுற்று வந்த ஒருவனுக்குத் தன்னுடைய தலையையுங் கொடுத்த பெருவள்ளலின் ஈகையின் சிறப்பை உரைதுரை யாவர்? உயிருக்கு ஆதாரமாக உடலுடன் ஒன்றியிருந்த கவசகுண்டலங்களைச் சேதித்து நல்கிய கதிர் மகன்றன் கொடையின் சிறந்தையாரே உரைக்க வல்லார்? கொடையின் பெருமைதான் என்னே! அக்கொடையாளர்களிடம் யாதுவர்க்கு நல்கக் கூடாத பொருள் யாதானும் ஒன்று இருந்ததுண்டா?

> தன்னைத்தான் புகழ்வோருந் தன்குலமே
> பெரிதெனவே தான்சொல் வோரும்
> பொன்னைத்தான் தேடியறம் புரியாம
> லவைகாத்துப் பொன்றினோரு
> மின்னைப் போன் மனையாளை வீட்டில் வைத்து
> வேசைசுகம் விரும்பு வோரும்
> அன்னைபிதா பாவலரைப் பகைப்போரு
> மறிவிலாக் கசட ராமே.
>
> தன்னையே புகழ்கின்றவர்களும், தன்சாதியே பெரிதென்றுரைப்பவர்களும், பொருளைத்தேடித் தருமஞ் செய்யாமல் புதைத்துவைத்திருப்பவர்களும், மின்னலைப்போலும் தேகசாந்தியுடைய மனைவியை வீட்டில் வைத்து பரஸ்திரீயை போகத்தை இச்சிக்கின்றவர்களும், தாய் தந்தை வித்வான்கள் முதலியோரை விரோதித்துக் கொள்ளுபவர்களுமாகிய இவர்கள் புத்தி யில்லாத கீழ்மக்களாவார்கள்.
>
> விவேக சிந்தாமணி

அதிகமான் என்று ஒரு வள்ளலிருந்தான். அவன் இல்லையென்று கேட்டார்க்கு இல்லை என்று சொல்லா ஈகையாளன். தகடூர் என்னும் நகரைத் தருமநெறி நின்று ஆண்டு நீதிவிளங்கும் ஆட்சிக்கெனிப் செங்கோலோச்சி வந்தான். அம்மன்னன் நெடுநாள் உயிர்வாழ விரும்பினான். உலகில் மனிதர்கள் யாவரும் மரணத்தை விரும்பாதவர்களல்லவா? நெடுங்காலம் வாழவேண்டும்

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். 380

ஊழைவிட வலிமையுடையவை வேறு எவை இருக்கின்றன? அந்த ஊழை விலக்குவதற்கு வேறொரு வழியை ஆராய்ந்தாலும், அங்கேயும் அந்த ஊழே முன்னால் வந்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒவ்வொருவரும் எண்ணுவது இயற்கை. அங்ஙனமே அம்மன்னர் பெருமானும் விரும்பினான். அதற்கு மார்க்கம் யாதென ஆராய்ந்தான். தன்பால் வரும் அறிவில் சிறந்த ஆன்றோர்களை அது குறித்து உசாவினான். ஒருவரும் அவருக்கு தக்க வழியைக் கூறினாரில்லை. அம்மணி முடிவேந்தன் ஒரு கால் அவ்வாறு ஏகாந்தமாகத் தனது மாளிகையின் ஓர்பால் மணியாசனத்திலிருந்து சிந்தித்துக் கொண்டிருந்தான். அச்சமயம் ஒரு பேரறிவாளர் அவன்பால் வந்தனர். வேந்தன் விரைந்தெழுந்து முகமன் கூறி இருக்கை நல்கி உபசரித்து தனது உட்கருத்தையுரைத்து "ஆயுள் நீடிக்க உபாயம் யாதோ" என்னி இருகை கூப்பி நின்றான். அப்பெரியவர் 'பெருமைமிக்க இத்தகைய மன்னன் நீண்டநாள் உலகில் வாழ்ந்திருந்தால் அனைவருக்கும் நன்மை விளையும்' என்று எண்ணி, மன்னனை நோக்கி 'பயன்தூக்காது நல்கும் பரமதயாளனே! இதோ தோன்றும் நினது குதிரை மலையின்மேல் சரிவில் ஓர் பெரிய பிளவு உண்டு. ஒருவரும் அணுகமுடியாத அப்பிளவில் ஒரு நெல்லிமரம் உளது. அது பல வருடங்களுக்கு ஒருமுறை பழுக்கிறது. அவ்வாறு பழுப்பினும் ஒரு கனி தானும் உண்டாவதில்லை. அத்தருவினிடம் யாரும் எளிதில் செல்ல முடியாது. அத்தகைய அருமையான நெல்லிக்கனியைப் பறிக்க முயன்று அருந்தினோர் மிகவும் உடல்வலிமைபெற்று உறுதியுடன் விளங்குவர். அன்னார் பிணிவாய்ப்பட்டு வருந்தார். வச்சிரம் போன்ற யாக்கை உடையவராய் நீண்டநாள் வாழலாம். ஆதலால் கருணை வள்ளலே! நீ அரிய பெரிய முயற்சி செய்து அக்கனியைப் பெற்றுண்டு நெடுநாள் இனிது வாழ்வாய்' என்று கூறி, மன்னன்பால் விடை பெற்று நீங்கினர்.

அதிகமான் அம்மலையை அடைந்து பிளவிருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முயன்று வந்தனன். ஒருநாள் அப்பெரும் பிளவைக் கண்டான். பெரிதும் வியப்புற்றான். சேடனுலகத்திற்குச் செல்லும் பிலம்போல் மிகவும் பயங்கரமான இருந்தது. அதில் தவறி விழுந்தோர் நாகலோகம் போவதற்கு ஐயமில்லை. அம்மலைச்சரிவின் இடை இடையே முட்புதர்கள் பல இருந்தன. அதில் சிக்குண்டோர் மீண்டும் தப்புதல் முடியாது. இடர்களுக்கு இருப்பிடமான இத்தகைய சரிவின் அடிப்பாகத்தில் அந்நெல்லிமரம் இருந்தது. அதிகமான் அம்மரத்தைக் கண்டான். மனமிக மகிழ்ந்தான். கருமமே கண்ணாயினார் மெய் வருத்தம் பாரார் அல்லவா, கனியைப் பெற விரும்பிய வேந்தன் அந்தப்பிளவின் அபாயநிலைக்கு அஞ்சினானில்லை. கனியை எப்படியாவது பெறும்படியேதான் அவனது நோக்கம் நின்றது. அஞ்சாநெஞ்சுடைய அவ்வீரம் மெல்ல அப்பிளவினுள் இறங்கினான். மரத்தின் அருகில் சென்றான். அத்தருவினை உற்று நோக்கினான். அத்தருவின் உச்சியில் ஓர் கிளையில் ஓர் கனியிருக்கக் கண்டு அளப்பரும் களிப்பை அடைந்தான். தருவின் மீது ஏறி அக்கனியைப் பறித்து இறங்கினான். மீண்டும் சரிவினின்று வெளிப்பட்டுத் தன்னுடைய நகரை நோக்கிப் புறப்பட்டான். வரும்போது அக்கனியை அடிக்கடி எடுத்துப் பார்த்துக் கொண்டே மகிழ்ச்சி மீதூர்ந்தவனாக நகரையடைந்து தன்னரண்மனையருகில் வந்து சேர்ந்தான். அத்தருணம் பெரும் புலமைப் பெருமாட்டியாகிய ஒளவைப்பிராட்டியார் அதியமானைக்காண அரண்மனை வந்தார். காவலர் வாயில் மன்னன் இல்லை எனத் தெரிந்து வாடிய முகத்துடன் திரும்புகிற சமயத்தில் அதிமான் வந்து சேர்ந்தான். நடந்துவந்த வருத்தம் ஒருபுறமும், மன்னன் இல்லாதவருத்தம் ஒருபுறமாக மனம்வருந்தி திரும்பிய ஒளவைப்பிராட்டியாரைக் கண்ட மன்னன், முகமலர்ந்து அவ்வையார் பசியால் வாடியிருக்கிறார் என்பதையுணர்ந்தான். மிகமிக முயன்று தேடிக் கொணர்ந்த நெல்லிக்கனியை உள்ளம் உவந்து அவர் கரத்திற் கொடுத்து "அன்னையே! யாவரும்

What is stronger than fate? If we think of an expedient (to avoid), it will itself be with us before thought.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமுண்டாயினும் வாழியிருக்கிறீர்; இக்கனியை உண்ணுவீர்" என்று வேண்டி நின்றான். ஒளவையார் பசிதாகத்தால் உடனே வாடியிருந் ததனால், அவ்வருநெல்லிக்கனியை அருந்தி மன்னன் தந்த ஆசனத்திலிருந்து இளைப்பாறினார். அப்பழத்தின் இனிமையை மனனிப் பேராச்சரிய மடைந்த ஒளவையார், "அருங்குணத்திற் சிறந்த தயாசமுத்திரமே! இக்கனி மிகவும் இனிமையாக இருக்கிறது. இதுபோன்ற இனிய கனியை யான் என்விடத்திலும் எக்காலத்திலும் கண்டதில்லை. இதனை எவ்விடம் பெற்றனை?" என்று வினவினார். அதிகமான் அக்கனியின் பெருமையையும், அதனைத் தான் பெற்ற வரலாற்றையும் கூறி, தமிழ் மொழிக் கடலின் கரை கண்ட தாயே! இக்கனியுண்டு அடியேன நெடுநாள் வாழ விரும்பினேன். ஆயினும் அடியேன் நெடுநாள் இருந்து என்ன பயன்? என்னால் உலகிற்கு என்ன நன்மை விளையும்? பெரும் புலமைப் பெருமாட்டியாகிய தாங்கள் நெடுநாள் இருந்தால் என்போன்ற அறிவிலிகளுக்கு அறிவுரைகூறி அறத்தின் பால் ஒழுகப் புரிவீர். அநேகம் மக்கள் நல்வழிப்படுவர். ஆதலால் இக்கனியைத் தாங்கள் உண்டு நோயற்றவாழ்வும் திடசரீரமும் நீடித்த ஆயுளும் அடைந்து எம்மனோர்க்கு இன்னருள் புரிய வேண்டி இதனைத் தங்களுக்களித்தேன். தாங்களுண்டதனால் யான் பெரிதும் மகிழ்கிறேன்." என்று கூறினன்.

அசரீரிய உரையைக் கேட்ட ஒளவையார் அத்தருமசீலனது பெருங்கொடையின் திறத்தை உன்னி இறும்பூதுற்றனர். ஆ! ஆ! என்னே அவன் குணத்தின் மேன்மை? என்னுவதற்கும் இயலுமோ? தனக்கென வாழாத் தருமபூபதி யவனேயன்றோ! எவ்வளவு அன்புற்று மிக்க ஆவலோடு தான் நெடுநாள் வாழவேண்டுமென்று அரிதிற்றேடிவந்த கனியைப் பிறருக்கீந்த, பிறர் வாழ்ந்தால் தான் வாழ்ந்ததாக எண்ணிய அக் கொடைப் பெருமானாம் அதிகமானையாரே புகழவல்லார். என்றுமழியாப்புகழை நாட்டிய பெருவள்ளல் அவனேயன்றோ? அத்திருவாளனை அறியாதவரும் உண்டோ? அவ்வள்ளற்பிரானை உடனே வியந்து, ஒளவைப்பிராட்டியார் அவன்புகழை உலகறிய இனியபாமாலையொன்று ஓதினார். அது வருமாறு:

"வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவின் பொலந்தார் அஞ்சி
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே!"

அவனியோற்றும ஒளவைப்பிராட்டி திருவாக்கால் இவ்வரிய பாடலைப் பெறச் செய்தது அறத்தின் பெருமையேயன்றோ? அறத்தின் பெருமையே பெருமை!

பெண்டுகள் சொற் கேட்கின்ற பேயரெனுங்
குணமுடைப் பேடி யோரை
முண்டைகளுக் கிணையில்லா முனை வீரர்
புருடரென மொழியொ ணாதே
உண்டுலக முதிர்ப்பாருள் கீர்த்தியுறு
மின்னதென வுணர்வே யில்லார்
அண்டினவர் தமைக்கெடுப்பா ரழிவழங்கே
செய்வதல ரறிவு தானே.

மங்கையர் சொற்களைக் கேட்கின்ற பேர்களாகிய கவலைக்கட்ட பேடியரையும், உலோகிகளுக்கும் விதவைகளுக்கும் ஒப்புரைக்கப்படாத சத்ரு வீரர்களுமாகிய பேர்களையும் ஆண் தன்மையுடையவரெனச் சொல்லக்கூடாது. உலகத்தில் பிறந்தவர்களுள் புகழும் தருமமும் இன்ன தென்று ஆராய்ந்து அறியா தவர்களே அடுத்தவர்களைக் கெடுப்பவரானவர். நியாயத்தைவிட்டு நியாய விரோதமாகப் பேசுவது அவர்கள் புத்தியாகும்.

விவேக சிந்தாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் தொன்மையும் சிறப்பும்

க. கணேசலிங்கம்

சைவம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம். அது எப்பொழுது தோன்றியது, எவரால் தோற்றுவிக்கப்பட்டது, என்று கூறமுடியாத வரலாற்றுப் பழமைபொய்ந்தது.

இன்று நிலவும் சைவத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்தியாவின் வடக்கே நிலவும் காஷ்மீர் சைவம், நடுப்பகுதியில் நிலவும் வீர சைவம், தெற்கே நிலவும் சித்தாந்த சைவம் என்பன இவை. இவற்றின் தத்துவங்கள், கோட்பாடுகள் ஆகியவற்றில் சில வேறுபாடுகள் உள்ளன. ஆயினும், அவற்றின் அடிப்படைக் கொள்கையில் வேறுபாடு இல்லை.

சைவ சித்தாந்தத்தைத் தத்துவமாகக் கொண்டு விளங்குவது சித்தாந்த சைவம். இக்கட்டுரையிலும் இனிவரும் கட்டுரைகளிலும் இது சைவம் என்றே குறிப்பிடப்படும். இச்சைவம் இந்தியாவில் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பிற நாடுகளிலும் விளங்குகிறது.

## வேதம், ஆகமம்

சைவத்தை அறிவதற்கு வேதம், ஆகமம் பற்றிய அறிவு பயனுள்ளது. வேதம் என்ற சொல் 'வித்' என்ற வடமொழிச் சொல்லை வேராகக் கொண்டது. 'அறிதல்' என்பது, இதன் பொருள். ஆகவே வேதங்கள் என்பவை அறிவு நூல்கள் என்று கொள்ளலாம். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு பகுதிகளாக இவை உள்ளன. இதனால் இவை நால்வேதம் என்றும் நான்மறை என்றும் கூறப்படும்.

வேதங்களில் இறுதியாக வந்தவை உபநிடதங்கள். இறுதியாக (அந்தமாக) வந்தவை என்பதால் இவை வேதாந்தம் என்றும் கூறப்படுகின்றன. வேதங்களின் முக்கியமான அறிவுசார் பகுதியாக (ஞானபாகமாக) இருப்பதாலும் இவை வேதாந்தம் எனப்படும்.

ஆகமம் என்பதற்கு ஒன்றிலிருந்து வந்தது என்பது பொருள். அது இறைவனிலிருந்து வந்ததென்பர். சைவ ஆகமங்கள் இருபத்தெட்டு. இவை மூல ஆகமங்கள் எனப்படும். இவற்றை விட உப ஆகமங்களும் உள்ளன.

மழை, மின்னல், இடி போன்ற இயற்கை நிகழ்ச்சிகளுக்குப் பயந்து தமக்குக் கேடு நிகழாமல் இருக்க இவற்றையே தெய்வமாக வணங்குதல், இவற்றைத் திருப்திப்படுத்த வேள்வி செய்தல் போன்றவற்றை வேதங்களில் காணலாம். அவற்றிலுள்ள பல கருத்துக்கள் சைவத்துக்கு உடன்பாடற்றவை. ஆயினும் வேதகாலச் சிந்தனையில் ஒரு வளர்ச்சியைக் காணமுடிகிறது. சைவம் உட்பட இந்திய மதங்கள் பலவற்றின் வேர்களை அங்கே காணமுடியும். இந்த வகையில் சைவம் வேதத்தைப் பிரமாணமாகக் கொள்கிறது.

சைவசமயத் தத்துவங்கள், வழிபாட்டுச் செயன்முறைகள், திருக்கோயில் அமைப்பு விதிகள் போன்ற அரிய செய்திகள் ஆகமங்களில் உள்ளன. இச்சிறப்புக்கருதியே சைவத்துக்கு வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்று கூறப்படுகின்றது.

## வேதகாலத்துக்கு முன்

சைவசமயம் ஆரியர் வருகையோடு வேதகாலத்திற்றான் தோன்றியதென்று முன்பு கருதப்பட்டது. ஆனால் இந்த நூற்றாண்டில் நடைபெற்ற சில அகழ்வாராய்ச்சிகளின் பயனாக சைவசமயமும் சிவவழிபாடும் வேத காலத்திற்கு முற்பட்ட வரலாற்றுப்பெருமை கொண்டதென்பது நிரூபணமாகியது.

மொகஞ்சதாரோ-கரப்பா அகழ்வாராய்ச்சிகளிலிருந்து, ஆரியர் வருகைக்கு முன்பே ஒரு நாகரிகம் இந்தியத் துணைக்கண்டத்திலிருந்த தென்பதற்கும், அது திராவிட நாகரிகம் என்பதற்கும் சான்றுகள் கிடைத்தன. இதன் அடிப்படையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி. யு. போப் என்ற மேனாட்டறிஞர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

ஆரியர் வருகைக்கு முன்பே தென்னிந்தியாவில் நிலவிய வரலாற்றுக்கு முற்பட்ட சமயமே சைவம்.

*ஜி. யு. போப் திருவாசகம்*

## தமிழர் சிந்தனை

தொல்காப்பியம் ஒரு பழந்தமிழ் இலக்கண நூல். தமிழ் எழுத்துக்களின் இயல்பு பற்றியும் தமிழ்ச் சொற்களின் அமைப்புப் பற்றியும் இந் நூல் தரும் விளக்கங்கள் சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன. இந்நூல் தோன்றப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ் பேசும் மக்களிடையே சைவம் தழுவிய கருத்துக்கள் நிலவியிருந்தாலன்றி இத்தகைய விளக்கங்கள் எழ இடமில்லை.

சைவம் தழுவிய சிந்தனையில் திருக்குறளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இதிலுள்ள கருத்துக்கள் மட்டுமன்றிச் சொல்லாட்சியும் கூடப் பின்வந்த இலக்கியங்களிலும் திருமுறைகளிலும் தத்துவ நூல்களிலும் இடம்பெறுகின்றன.

இன்று வடமொழியிலுள்ளவை எல்லாம் தென்புலத்தவர் கருத்துக்களென்று கூறமுடியாது. ஆரியர் வருகைக்கு முன்பிருந்த சமயக்கொள்கைகளும் பின்னர் எழுந்த கொள்கைகளும் இணைந்து சைவம் வளர்ச்சியடைந்ததென்பது அறிஞர் பலரின் கருத்தாக உள்ளது.

## திருமுறைகளும் மெய்கண்ட நூல்களும்

தமிழகத்தை வடக்கேயிருந்து வந்த களப்பிரர் என்பவர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை ஆண்டனர். இவர்கள் மொழியால் தமிழரல்லாதவர்; மதத்தால் சமணர். இவர்கள் வருகைக்கு முன்பே பௌத்தமதம் தமிழ்நாட்டிற்கு வந்துவிட்டது.

களப்பிரரின் ஆட்சியில் தமிழிலுள்ள அறிவு நூல்கள் அழிக்கப்பட்டன. தமிழர் நாகரிகம் சிதைவுற்றது. சைவம் அழிவை நோக்கியது. சமணம் அரச மதமாக மாறியது. இந்த நிலையில்தான் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற அருளாளர் தோன்றி தமிழும் சைவமும் தழைக்க பணி புரிந்தனர். ஊரூராகச் சென்று திருப்பாடல்கள் பாடியும் தொண்டுகள் செய்தும் தமிழகத்தில் ஒரு எழுச்சியை உண்டாக்கினர். இந்த அருளாளர் பாடிய திருப்பாடல்கள் பன்னிரண்டு தொகுதிகளாகப் பின்னர் தொகுக்கப்பட்டு பன்னிரு திருமுறைகள் என்று வழங்கப் படுகின்றன. சைவத்தமிழரின் பக்தி நூல்களான இவை தோத்திர நூல்கள் எனப்படும்.

பழந்தமிழ் நூல்களிலும் பன்னிருதிருமுறைகளிலும் வேதாகம நூல்களிலும் பரவிக்கிடந்த தத்துவக்கருத்துக்களை ஒழுங்குபடுத்திச் சைவ சித்தாந்த தத்துவ நூல்களால் பின்னர் வந்த ஞானிகள் தந்தனர். இவை மெய்கண்ட சாத்திரங்கள் என்ற பெயரில் பதினான்கு நூல்களாக உள்ளன. "சைவசித்தாந்த தத்துவம் திராவிடரின் (தமிழரின்) பேரறிவில் உதித்த பெருங் கொள்கை" என்று ஜி. யு. போப் போன்ற உலகப் பேரறிஞரால் போற்றப்படுகிறது.

பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களும் தமிழர் போற்றும் சைவத்தின் அடிப்படை நூல்களாக அமைந்துள்ளன. இன்று, உலகிலுள்ள சமயங்களில் பழமையும் சிறப்பும் மிக்க சமயமாகச் சைவசமயம் கருதப்படுகிறது.

*சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம்*
*தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லென்னும் நான்மறைச்*
*செம்பொருள்வாய்*
*மைவைத்த சீர்திருத் தேவார மும்திரு வாசகமும்*
*உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம்*
*உயிர்த்துணையே.*

*-திருப்பெருவடிவக்கலம்பகம்.*

*நன்றி சைவத்தமிழ் அறிமுகங்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலாதாராதிப மூர்த்தி

-சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள்

குய்யத்துக்கும் குதத்துக்கும் நடுவே குண்டலினி வட்டவடிவாயிருக்கும். அதன் நடுவில் முக்கோணமிருக்கும். முக்கோணத்தின் நடுவில் வசஷஸ என்னும் நாலிதழ்க்கமலமிருக்கும். அதன் நடுவில் பிரணவாக்கரமிருக்கும். அதில் விக்னேஸ்வரர் யானை முகத்தையும், செந்நிறத் திருமேனியையும் உடையவராய், அபயவரத மூஷிக வாகனராய், வல்லபாசத்தியுடன் கூடியவராய் எழுந்தருளியிருப்பார்.

திருமந்திரம்

*மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு*
*மாமலர் நாலினும் வவ்வாதி சவ்விடு*
*மாமலர் நாலிலே வட்டத்தி னுள்ளே*
*ஓமென விநாயகன் உகாலநின்றான்.*

பாசத்தையும், அங்குசத்தையும் ஏந்தியது துன்மார்க்கர் இடையூறும், செலுத்துபவரும் பிறிதொருவர் இல்லையென்பதை உணர்த்துவதற்காகும். சிவஞான சுவாமிகள் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழில் "ஏர் கொண்ட தன்னைத் தவளப்பவரு முருநருமிலரென்பதுதேறும் - கெடுத்த வெம்பாச மோகாங்குசந் தன்கரத்தேந்தி" என்று கூறியுள்ளார்.

ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மத முற்று, ஞானமாகிய தூணை அடிமுரித்து, அன்பாகிய சங்கிலியை உதறி, திருவருளாகிய கூடத்தினின்றும் நீங்கி, இருநூற்றிருபத்துநான்கு புவனங்களாகிய காட்டில் ஓடி, எவ்வகைக்கும் அடங்காதனவாய் இருக்கின்ற உயிர்களாகும் யானைகளை விடாது தொடர்ந்து பிணிக்கும் வல்லமையான அங்குசபாசங்களை அறிக.

"முப்பால மாமதமுற்றுப் போத முழுத்தறி பறவீச முகிழ்த்தவன்னிய சங்கிலி பதறி முதிர்த்தவருட் கூடத் திம்மென நீங்கி வெளிக்கோடு புவன வெறுங்கறங்கவோடி எப்பகைக்கும் அடங்கலவாகி இயங்கு முயிர்க்கரிகள் தம்மை விடாது தொடர்ந்து பிணிப்பத் தருமங் குசபாசம் தாங்குதல் கண்டும்.

பக்குவ முதிர்ச்சியாற் சிவபுண்ணியம் மேம்பி மலபரிபாகம் பிறந்து, சிவசத்தி பதிப்பப்பட்டு, இருவினை யொப்புப் பழுத்த ஆன்மாக்களது பிறவி நீங்கும்படி ஞானகுருவாய் வந்து அடிமைக்கொள்பவர் விநாயகரே என்பதை உணர்த்துவது அவருடைய ஒரு திருக்கரமாம்.

முற்பிறவிகளிலே ஒன்றன்பின் ஒன்றாகிய முறையானே சரியை முற்றிய பின் கிரியையும், கிரியை முற்றியபின் யோகமும், அனுட்டித்து முற்றுப்பெற்றபின் அம்மூன்றும் முற்றுதலால் மலபரிபாகமும், சத்திநிபாதமும் தோன்றும். (மலபரிபாகமாவது) மலசத்தி தேய்தல்; அதாவது ஆணவமலகாரியமான மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்னும் ஏழு கெட்ட குணங்கள் ஆன்ம அறிவை விட்டு நான்கு பாதமாக நீங்குதல். மோகம் - குருவினாலும், நூல்களாலும் தியனவென்றறிந்தவற்றில் நீங்காமல் நிற்கும் மயக்கம். மதம் - தன்னைப் போல் ஒருவருமில்லையென மதித்தல். இராகம் - கிடையாத பொருளினிடத்து ஆசைப்படுதல். கவலை - கிட்டிய பொருள் பிரிந்தபொழுது வருந்துதல். தாபம் - சுற்றத்தைவிட்டுப் பிரிந்ததற்கும், பிரிவதற்கும் ஆற்றாமை. வாட்டம் - அவ்வாற்றாமையால் மலர்ச்சியின்றி வாடுதல். விசித்திரம் - எச்செயலும் வினையின் வழியாய் நிகழ்வதென்றெண்ணாது, நான் செய்ததாகவும், பிறர் செய்ததாகவும், எண்ணுதல். சத்தினிபாதம் - சத்திபதிதல்; சத்தி - திருவருள்; நிபாதம் - பதிதல். சத்தினிபாதமாவது ஆன்மாவினது ஞானத்தைத் தடுக்கும் ஆணவ மலசக்தி நழுவும் அவசரத்தில் முற்பிறப்பாட்டின் சிவசத்தியினது சிற்சத்தி பதிந்து அவ்வான்மாவினது இச்சிய ஞானக்கிரியையை விளக்குவதாம். சத்தினிபாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்ததரம், மந்தம், தீவிரதரம், தீவிரம் என நான்கு வகைப்படும். (தீவிரதரம், எனினும் அதிதீவிரம் எனினும் ஒக்கும்) மந்ததரமாவது நமக்குப் பெறுபேறாயுள்ள பதி ஒருவர் உண்டென்று அறிவொழிந்திருத்தல். மந்தமாவது அப்பதியை அடைதற்கு வழி எங்ஙனமென்றாராய்தல். தீவிரமாவது அவ்வழி மாராய்ந்தறிந்து பதியை அடையும் பொருட்டு அதற்குத் தடையாயுள்ள பிரபஞ்சத்தை அகத்தான் வெறுத்துப் புறத்தாற் றழுவுதல். தீவிரதரமாவது அப்பிரபஞ்சத்தை அகம், புறம் என்னும் இரண்டானும் முற்றத்துறந்து ஞானாசிரிய ரொருவரையே பொருட்படுத்துத் திரிகரணங் களினாலும் வழிபடுதல். இருவினையொப்பாவது நல்வினை, தீவினை என்னும் இருவினைகளும் பொன்விலங்கும் இரும்பு விலங்கும் போலப் பிறப்பு இறப்புக்களிற் கட்டுப்படுத்துந் தன்மையிற் சமமுடையனவாகுமென ஆன்ம அறிவின்கண் விளங்கி, அவ்விரு வினைகளையும் ஒப்ப நாடி உவர்த்து விடுதலேயாம். மேன்மேல் முறுகி வளர்வனவாய்ச் சரியை முதலிய தவங்களால் அறம், பாவம், என்னுமிரண்டும் நேராக ஒத்தால் அச்சரியை முதலிய தவத்தின் முதிர்ச்சியால் ஞானகுருவைத் தேடி அடைந்து ஞானத்தை அடைவர்.

கொடுப்பவரும், அனுபவிப்பவரும், உலகெங்கும் எல்லாப்பொருள்களிலும் வியாபித்திருப்பவரும் விநாயகரே. நாம் அவருக்கு அடிமை என்றறிந்து, மலவாசனை நீங்குதற் பொருட்டும், ஆன்மா சிவோபாதியைப் பொருந்தாமல் அதற்கு அதீதமாய் அலைவற்று நின்மலமாயுள்ள விநாயகரின் சலனமற்று இருக்கும்படியும் உயிரும், உடம்பும், பொருளும் கடவுளுடைமை எனத் திருவருளால் அறிந்து, தானஞ்செய்து கொடுக்க அங்கீகரிப்பது வரதகரமாம்.

---

ஸ்ரீ பதினெண் சித்தர்கள்



# ஸ்ரீ கருவூரார்

Dr. எஸ். யோகநாதன் B.S.M.S.(India) J.P
மரகதம் கிளினிக், நானாட்டான், மன்னார்.

இவர் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கருவூரைச் சேர்ந்தவர். வெண்கலம், பித்தளை, தாம்பிரவேலை செய்யும் விஸ்வகர்மா வகுப்பைச் சேர்ந்தவராவார். இவர் பற்பல தலங்களைத் தரிசனம் செய்துள்ளார். ஒரு சமயம் இவர் தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலி சென்று நெல்லையப்பரையும் காந்திமதி அம்மையாரையும் தரிசித்து மாலூரில் தங்கியிருந்தார். அங்கு அவர் சயனித்திருக்கும் வேளை நெல்லையப்பரும் காந்திமதி அம்மையாரும் காட்சியருளினார் என்று நெல்லைத்தல புராணம் கூறுகின்றது. இக்கோவிலில் இந் நிகழ்ச்சியை ஞாபகமூட்டும் விதமாக ஆண்டுதோறும் ஆவணி மூலத்திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது. திருவிசைப்பா ஆசிரியர்களில் ஒருவரான கருவூரார் ஆதித்த சோழன் காலத்தைச் சேர்ந்தவர். இச்சோழ மன்னன் மதுரையையும் ஈழத்தையும் ஆண்டவனாவான். இச்சோழ மன்னனின் மைந்தனே இக்கருவூரர் ஆவார். கருவூரார், போகரது சீடர் என்றால் அவர்கள் வாழ்ந்த காலத்தில் உரோமன் பொன் நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. கருவூரார் பல திரட்டு, கருவூரார் அட்டகன்மம் 100, கருவூரார் வாதகாவியம், கருவூரார் பூஜாவிதி எனும் நூல்களை இவர் இயற்றினார். இவர் தாம் அவதரித்த கருவூரிலேயே சமாதி நிலை எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## [illegible]

| வைகாசி | | | |
|---|---|---|---|
| 01 | 15-05-2003 | வியாழக்கிழமை | மாதப்பிறப்பு, பூரணை விரதம் |
| 04 | 18-05-2003 | ஞாயிற்றுக்கிழமை | திருஞானசம்பந்தர் குருபூசை, முருகர் குருபூசை<br>திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை<br>திருநீலநக்கர் குருபூசை |
| 05 | 19-05-2003 | திங்கட்கிழமை | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 14 | 28-05-2003 | புதன்கிழமை | பிரதோஷ விரதம் |
| 15 | 29-05-2003 | வியாழக்கிழமை | கழற்சிங்கர் குருபூசை |
| 16 | 30-05-2003 | வெள்ளிக்கிழமை | அமாவாசை விரதம், கார்த்திகை விரதம் |
| 21 | 04-06-2003 | புதன்கிழமை | சதுர்த்தி விரதம்<br>நமிநந்தியடிகள் குருபூசை, சேக்கிழார் குருபூசை |
| 22 | 05-06-2003 | வியாழக்கிழமை | ஷஷ்டி விரதம், சோமாசிமாறர் குருபூசை |
| 29 | 12-06-2003 | வியாழக்கிழமை | பிரதோஷ விரதம், வைகாசிவிசாகம் |
| 31 | 14-06-2003 | சனிக்கிழமை | பூரணை விரதம் |

### சந்தா நேயர் கவனத்திற்கு

* உரிய காலத்தில் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவும்.
* முகவரி மாற்றம் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.
* இதழ்கள் ஒழுங்காகக் கிடைக்காவிடின் எம்முடன் தொடர்புகொள்ளவும். கிடைக்காத இதழ்களை அனுப்பிவைப்போம்.

## சைவநீதி மாத இதழ்

**பெறுமதி விபரம்**

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில்
ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் உங்கள் பங்களிப்பு எவ்வளவு என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

*C. Navaneethakumar*
42, Janaki Lane, Colombo-04,
Sri Lanka.
T'Phone No: 595221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புத்தக விற்பனை

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவாசகம்

## வெளிவந்துள்ளது.

நீண்டகாலப் பாவனைக்கு ஏற்றவண்ணம் பிளாஸ்டிக் கவருடன் கூடிய திருவாசகம் விற்பனைக்கு உண்டு. பிரதி ஒன்றின் விலை ரூபா 150/- மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்குக் கழிவு உண்டு.

* விதியை வெல்வது எப்படி?
* திருவருட்பயன் - மூலமும் உரையும்

ஆகிய நூல்களும் விற்பனைக்கு உண்டு.

கிடைக்கும் இடம்:

**சைவநீதி**

195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங் கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

**கலையரசி**

23/1, விவேகானந்த மேடு,
கொழும்பு-13. தொ.பே: 478885

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

பாரம்பரிய சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில்

- கருங்கல் விக்கிரகங்கள்
- கருங்கல் ஆசனங்கள்
- கருங்கல் கோமுகைகள்
- கருங்கல் தளவரிசைகள்
- கருங்கல் படிகள்
- கருங்கல் நிலைகால்கள்
- கருங்கல் போதிகைகள்
- கருங்கல் தூண்கள்
- கருங்கல் பாவுகற்கள்
- கருங்கல் வரிக்கற்கள்
- செப்பு விக்கிரகங்கள்
- ஐம்பொன்விக்கிரகங்கள்
- கலசங்கள்
- திருவாசிகள்
- கொடி ஸ்தம்பங்கள்
- செப்பு அங்கிகள்
- வெள்ளி அங்கிகள்
- தங்க அங்கிகள்
- ஆசனத் தகடுகள்
- கிரீடங்கள்

மற்றும் அனைத்து கருங்கல் சிற்ப வேலைகளுக்கும் உலோக சிற்ப வேலைகளுக்கும்
ஸ்தபதி சு. சண்முகவடிவேல்

**அபிராமி சிற்ப நிலையம்**

61, முதலாம் குறுக்குத்தெரு,
வவுனியா, இலங்கை.


Regd.No.QD/48/News 2003 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் யுனைற்ரெட் மேர்ச்சன்ஸ் லிமிட்ரெட் அச்சகத்தில் அச்சிட்டு 12-04-2003 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org